BELLWETHER INTERNATIONAL

புதிய ஏற்பாடு விளக்கவுரை
THE NEW TESTAMENT COMMENTARY
2 தீமோத்தேயு

GOOD NEWS PUBLISHERS

2 தீமோத்தேயு

பவுலின் இரண்டாம் நிருபத்தைப் பெற்றுக் கொண்ட தீமோத்தேயு நீண்ட நாட்கள் எபேசுவில் இருக்கவில்லை (2தீமோத்தேயு 4:12,13). அவர் ஒரு வேளை மக்கெதோனியாவில் அல்லது அகாயாவில் சுவிசேஷப் பணியில் ஈடுபட்டிருந்திருப்பார். பவுலின் சூழ்நிலையும் மாறியிருந்தது. அவர் மீண்டும் காவலில் இருந்தார் (1:8; 2:9).

புதிய ஏற்பாட்டிலுள்ள பவுலின் விசாரணையும், காவலும் பற்றிய விவரங்கள், கிறிஸ்தவர்களின் மீது ரோம அரசுக்கிருந்த மனப்பான்மை படிப்படியாக இறுக்கம் அடைந்ததையே காட்டுகிறது. துவக்கத்தில் ரோம அதிகாரிகள் இவற்றைப் பெரிதுபடுத்த வில்லை (அப்போஸ்தலர் 18:14-17). அதற்குப் பின்பு, அவற்றைச் சகித்துக் கொள்ளக் கூடியவர்களாயிருந்தனர் (26:30-32). அதற்கு பிற்பாடு கசப்புள்ளவர்களாக மாறினார்கள். கி.மு. 64-இல் ரோமசக்கரவர்த்தியாகிய நீரோவின் கீழ் துவங்கிய உபத்திரவத்தில் கிறிஸ்தவர்களில் அதிகமானோர் தங்களுடைய விசுவாசத்திற்காகக் கொடுமைப்படுத்தப்பட்டதை வரலாறு புலப்படுத்துகிறது. கொடுமைப்படுத்தப் பட்டவர்களில் பவுலும் ஒருவராக இருந்திருக்கலாம். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது, தான் மரிக்கவும் ஆயத்தமாக இருப்பதாகக் குறிப்பிடுகிறார்.

பவுல் அளித்த ஆலோசனை, எச்சரிப்பு, புத்திமதி, வேண்டுகோள், சொந்த அனுபவங்கள் ஆகியவை ஒன்றறக் கலந்ததே இரண்டாம் தீமோத்தேயு ஆகும். தனது பணியிலிருந்து விடைபெறும் மூத்த அலுவலர், தனது ஸ்தானத்தில் வரவிருக்கும் இளம் அலுவலருக்கு அறிவுரை வழங்குவது போல, பவுல் தீமோத்தேயுவுக்குப் புத்திமதி கூறினார். உண்மையுள்ளவனாயிருக்கும்படி அவனை ஊக்குவித்தார் (1:1-13).

நல்ல போர்ச்சேவகனாயிருக்கும்படி அறை கூவினார் (2:14-25). கொடியகாலங்களின் நிலவரத்தை முன்னுரைத்தார் (3:1-9). அவரது ஊழியத்தின் கீழ் உள்ளவர்களை சீர்திருத்தவும், கடிந்து கொள்ளவும், ஊக்குவிக்கவும் தேவவசனத்தைப் பயன்படுத்தும்படிக்குக் கட்டளையிட்டார் (3:16,17; 4:2). லூக்கா மாத்திரம் அவரோடிருந்தார். மற்றபடி பவுல் தனிமையாகவே இருந்தார். "பிரியமுள்ள குமாரனாகிய" தீமோத்தேயு தன்னிடத்தில் வரவும், தான் துரோவாவில் விட்டு வந்த சில உடைமைகளை அவன் கொண்டு வரவும் பவுல் விரும்பினார் (4:9-22).

தனது மேற்பார்வையின் கீழ் ஊழியஞ் செய்தவர்களுக்கு 2தீமோத்தேயுவில் பவுல் கொடுத்த கட்டளையாவது:-

அ. உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட நற்பொருளைக் (சுவிசேஷத்தைக்) காத்துக் கொள் (1:14).

ஆ. நல்ல போர்ச் சேவகனாய்த் தீங்கனுபவி (2:3).

இ. இயேசு கிறிஸ்துவையும், அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததையும், அவர் தாவீதின் சிங்காசனத்தில் உட்காரப் போவதையும் நினைத்துக் கொள் (2:8).

ஈ. என்னிடத்திலும் வேதத்திலுமிருந்தும் கற்றுக் கொண்டவைகளில் நிலைத்திரு (3:14).

உ. திருவசனத்தையும், ஆரோக்கியமான உபதேசத்தையும் பிரசங்கம் பண்ணு (4:2,3).

2 தீமோத்தேயு

2 தீமோத்தேயு: ஒருவரின் ஸ்தானத்தில் பின்வருபவருக்கான கட்டளை

1. ஆரம்ப வாழ்த்து *(1:1-2)*.
2. உன் அழைப்புக்கு உண்மையாயிரு *(1:3-2:13)*.
3. உன் வேலையில் ஜாக்கிரதையாயிரு *(2:14-26)*.
4. வருங்காலத்துக்கு ஆயத்தப்படு *(3:1-9)*.
5. வேதவாக்கியங்களில் நிலைத்திரு *(3:10-17)*.
6. உன் ஊழியத்தை நிறைவேற்று *(4:1-8)*
7. தனிப்பட்ட வேண்டுகோள் *(4:9-22)*.

முக்கியமானத் தகவலின் மறுபார்வை

1 தீமோத்தேயுவுக்கும், தீத்துவுக்கும் பவுல் எழுதிய நிருபங்கள் "ஆயர் மடல்கள்" என அழைக்கப்படுகின்றன. ஏனெனில், இவ்விருவரையும் போதகப் பணியில் ஊக்குவிக்கவும், இவர்களுக்கு அறிவுரைகள் வழங்கவும் இந்நிருபங்கள் எழுதப்பட்டன.

2. தனது இளம் கூட்டாளிகளாகிய தீமோத்தேயுவுக்கும், தீத்துவுக்கும் பவுல் கொடுத்த ஆலோசனைகளில் சில பின்வருமாறு:

அ. பண ஆசையை விட்டு ஓடு *(1தீமோத்தேயு 6:10-11)*.

ஆ. நீதி, தேவபக்தி, விசுவாசம், அன்பு, பொறுமை, சாந்தகுணம் ஆகியவற்றை அடையும்படி நாடு *(6:11)*.

இ. விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு *(6:12)*.

ஈ. நித்திய ஜீவனைப் பற்றிக் கொள் *(6:12)*.

உ. நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கனுபவி *(2தீமோத்தேயு 2:3)*.

ஊ. பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு விலகியோடி, நீதியையும், விசுவாசத்தையும், அன்பையும், சமாதானத்தையும் அடையும்படி நாடு. புத்தியீனமும், அயுக்தமுமான தர்க்கங்களுக்கு விலகியிரு *(2:22,23)*.

எ. நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கனுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று *(4:5)*.

ஏ. புத்தியீனமான தர்க்கங்களையும், வம்ச வரலாறுகளையும், சண்டைகளையும், நியாயப் பிரமாணத்தைக் குறித்து உண்டாகிற வாக்குவாதங்களையும் விட்டு விலகு *(தீத்து 3:9)*.

ஐ. வேதப்புரட்டனாயிருக்கிற ஒருவனுக்கு நீ இரண்டொருதரம் புத்திசொன்ன பின்பு அவனை விட்டு விலகு *(3:10)*.

2 தீமோத்தேயு

3. தீமோத்தேயுவும், தீத்துவும் அப்போஸ்தலனாகிய பவுலிடமிருந்தும் (அவர்களின் ஆவிக்குரிய தலைவர்), வேதவசனத்திலிருந்தும் கற்றுக் கொண்ட சுவிசேஷ சத்தியத்தை வெளிப்படுத்தி, கள்ளப் போதகங்களைக் கண்டனம் பண்ணும்படி சபைகளுக்கு அனுப்பப்பட்டார்கள்:

அ. நீ போதித்து, சகல அதிகாரத்தோடும் கடிந்து கொள் (தீத்து 2:15).

ஆ. என்னிடத்தில் (பவுலிடம்) கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு...... உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட நற்பொருளைக் (சுவிசேஷத்தைக்) காத்துக் கொள் (2தீமோத்தேயு 1:13,14).

இ. அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி (2தீமோத்தேயு 2:2).

ஈ. ஆரோக்கியமான உபதேசத்துக்கு ஏற்றவைகளையும், முதிர்வயதுள்ள புருஷர்கள், முதிர் வயதுள்ள ஸ்திரீகள், பாலிய புருஷர், பாலிய ஸ்திரீகள், வேலைக்காரர் முதலானோர்க்கு ஏற்றவைகளையும் பேசு (தீத்து 2:1-10).

உ. ஜாக்கிரதையாய் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு, எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு (2தீமோத்தேயு 4:2).

4. புதிதாக நிறுவப்பட்ட சபைகளில் தீத்துவும், தீமோத்தேயுவும் மூப்பர்களையும் (மேய்ப்பர், கண்காணிகள்) உதவியாளர்களையும் நியமிக்கும்படி பவுல் எதிர்பார்த்தார். இவர்களுக்கான தகுதிகள் 1தீமோத்தேயு 3:2-12; தீத்து 1:6-9 வசனங்களில் வரையறுக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

2 தீமோத்தேயு

மூப்பர் (மேய்ப்பர், கண்காணி)	உதவிக்காரர்
தன் இஷ்டப்படி செய்யாதவன்	குற்றஞ்சாட்டப்படாதவன்
அந்நியரை உபசரிக்கிறவன்	ஒரே மனைவியை உடைய புருஷன்.
போதக சமர்த்தன்	இச்சைபடக்கூழுள்ளவன்
அடியாதவன், பொறுமையுள்ளவன்	மதிப்புக்குரியவன்
சண்டை பண்ணாதவன்	மதுபானம் பண்ணாதவன்
பண ஆசை இல்லாதவன்	தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவன்
சமீபத்தில் மனந்திரும்பியவனாய் இருக்கலாகாது	தன் பிள்ளைகளைக் கீழ்ப்படியப் பண்ணுகிறவன்
புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவன்	இழிவான ஆதாயத்தை இச்சியாதவன்
தெளிந்த புத்தியுள்ளவன்	ஆழமான சத்தியத்தைப் பற்றிக் கொள்ளுகிறவன்.

2 தீமோத்தேயு

மூப்பர் (மேய்ப்பர், கண்காணி)	உதவிக்காரர்
முற்கோபமில்லாதவன்	உண்மையுள்ளவன்
நல்லோர் மேல் பிரியமுள்ளவன்	முன்னதாகச் சோதிக்கப்பட்டவன்
நீதிமான், பரிசுத்தவான்	
நல்லொழுக்கம் உள்ளவன்	
குற்றஞ்சாட்டப்படாதவன்	
ஒரே மனைவியை உடைய புருஷன்	
இச்சையடக்கம் உள்ளவன்	
மதிப்புக்குரியவன்	
மதுபானம் பண்ணாதவன்	
தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவன்.	
தன் பிள்ளைகளைக் கீழ்ப்படியப் பண்ணுகிறவன்.	
இழிவான ஆதாயத்தை இச்சியாதவன்	
ஆழமான சத்தியத்தைப் பற்றிக் கொள்ளுகிறவன்.	

ஒரு வாலிப அப்போஸ்தலனுக்குரிய அறிவுரைகள் (2 தீமோத்தேயு 1:6-14)

முன்னுரை

அ. தீமோத்தேயு, அப்போஸ்தலனாகிய பவுலுடைய ஆவிக்குரிய பிள்ளை. (1:2; மற்றும், 1தீமோத்தேயு 1:2; பிலிப்பியர் 2:22; 1கொரிந்தியர் 4:17) அவன் லீஸ்திராவில் வாழ்ந்தான் (அப்போஸ்தலர் 16:1) ஒரு புறஜாதியான கிரேக்கத் தகப்பனுக்கும், ஐனிக்கேயாள் என்ற பக்தியுள்ள யூதத் தாய்க்கும் பிறந்தவன். (1:5; அப்போஸ்தலர் 16:1) அவன், பழைய ஏற்பாட்டு பரிசுத்த வேத வசனங்களைக் கற்றவன். அவனுடைய தாய் மற்றும் லோவிசாள் என்ற அவனுடைய பாட்டி ஆகியவர்களால் வளர்க்கப்பட்டவன். அவனுடைய முதல் சுவிசேஷ ஊழிய பிரயாணத்தின்போது, பவுலுடைய போதனைகளைக் கேட்டு, அவனுடைய தாய், மற்றும் பாட்டி ஆகிய இரண்டு பெண்களைப்போல, கிறிஸ்துவில் அவனுடைய விசுவாசத்தை வைத்தான். (1:5; 3:15)

ஆ. பிற்பாடு, அவன் தூரதேச சுவிசேஷ ஊழியனாக அபிஷேகம் பண்ணப்பட்டு, பவுலுடைய இரண்டாவது சுவிசேஷ ஊழியர் பயணத்தில் அவனுடன், பிலிப்பி, தெசலோனிக்கேயா, பெரோயா முதலிய பட்டணங்களுக்குச் சென்றான். (1:6; 1 தீமோத்தேயு 4:14, அப்போஸ்தலர் 20:4). அதன் பிறகு, கொரிந்து மற்றும் எபேசு பட்டணங்களில், பவுலுடன் சேர்ந்து ஊழியம் செய்தான். பவுலுடைய மூன்றாவது சுவிசேஷ ஊழியர் பிரயாணத்தில், துரோவா மற்றும் எருசலேமுக்குப் பிரயாணம் செய்யும்போது அவனுடன் கூட இருந்தான். (அப்போஸ்தலர் 20:5, 1கொரிந்தியர் 16:3) பவுலுடைய முதல் சிறையிருப்பின்போதும், ரோமாபுரியில் அவனுடன் தீமோத்தேயு இருந்தான். (பிலிப்பியர் 1:1; 2:19).

(இ) நீரோ அரசனுக்குக் கீழ், (கிபி. 66/67) ரோமாபுரியில், அவனுடைய இரண்டாம்சிறையிருப்பின்போது தீமோத்தேயுவுக்குப் பவுல் இந்த இரண்டாம் நிருபத்தை, அநேகமாக எழுதியிருக்கவேண்டும். வீட்டுக் காவலில் முதல் முறை தங்க வைத்ததுபோல் அல்லாமல், குளிர்ந்து சிறிய இருண்ட அறையில், சாதாரணக் குற்றவாளியைப் போல விலங்கிடப்பட்டு பவுல் சிறையில் இருந்திருக்கவேண்டும் (1:16; 2:9; 4:13) அவன், தன்னுடைய வாழ்க்கை ஊழியத்தின் முடிவு சமீபமாயிற்று என்றும் அவன் அறிந்திருந்தான். (4:6-8) ஆகவே, அவன் தீமோத்தேயு தன்னிடம் வரும்படியாகக் கேட்டுக்கொண்டான். (4:9,21) ஆகவே, அவனுடைய ஆவிக்குரிய குமாரனாகிய தீமோத்தேயுவின், அப்போஸ்தல ஊழியமே, அவனுடைய முக்கிய மேலான கரிசனையாக இருந்தது.

1. தேவனுடைய வரம் சுடர்விட்டெரிய தூண்டிவிடவேண்டும் (1:6-7).

அ. வசனம் 6. "இதினிமித்தமாக," "நிமித்தம்" என்பது அவருடைய ஆவிக்குரிய குமாரனாகிய தீமோத்தேயுவிடம், பவுல் வற்புறுத்திக்கூறும், கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசமாயிருக்கிறது (வசனம் 5).

ஆ. வசனம் 6 "...தேவ வரத்தை நீ அனல்மூட்டி எழுப்பிவிடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன்" "அனல் மூட்டி எழுப்பிவிடும்படி," இது எரிந்துகொண்டிருக்கும் நெருப்பிற்குக் காற்று வீசும்படிசெய்தால் அது சுடர்விட்டு எரியும், இங்கு இது படரூபமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. நெருப்பு, (தேவனுடைய வரம்) கவனிக்காமல் விடப்படுமானால் அல்லது நமது கவனம் வேறொரு காரியத்தில் செலுத்தப்படுமானால், அது எரிவது குன்றிப்போகும் அல்லது அணைந்துபோகும்.

ஒரு வாலிப அப்போஸ்தலனுக்குரிய அறிவுரைகள் (2 தீமோத்தேயு 1:6-14)

இ. "தேவனுடைய வரம்" அவன் ஊழியத்திற்கு அழைக்கப்பட்ட சமயம், தேவன் தீமோத்தேயுவுக்குக் கொடுத்த வரத்தை இது குறிக்கிறது. (1தீமோத்தேயு 1:18; 4:13-14) "வரம்" என்பது, ஒரு போதகனாகவும், அப்போஸ்தலனாகவும் (சுவிசேஷம் அறிவிக்கும் ஊழியன்-எபேசியர் 4:11-13) ஊழியம் செய்யும்படி தீமோத்தேயு, பரிசுத்த ஆவியினால் தேர்ந்தெடுக்கப்பட்டதை, இது அநேகமாக குறிப்பிடுகிறது. இது, ஒரு கிருபையின் வரம், தகுதிபடுத்தும் வரம், ஆவிக்குரிய சொத்தாகக் கொடுக்கப்பட்டது, ஒரு அற்புதமான திறமை.

ஈ. வசனம்6 "---நான் உன் மேல் என் கைகளை வைத்ததினால், உனக்கு உண்டான ---" தீமோத்தேயு முதன் முதலாவது, போதகர்கள் அடங்கிய கூட்டத்தினரால் அபிஷேகம் பண்ணப்பட்டபோது (சுமார் 12 வருடங்களுக்கு முன்) பவுலும் கூட அவருடைய கரங்களை அவன் மீது வைத்தார். அப்பொழுது, பரிசுத்த ஆவியானவரால், ஒரு அப்போஸ்தலனாக (தூரதேச சுவிசேஷம் அறிவிக்கும் ஊழியன்) அழைக்கப்பட்டான். (தீர்க்கதரிசன வசனத்தின் மூலமாக) (1தீமோத்தேயு 1:18; 4:13-14 மற்றும் அப்போஸ்தலர் 13:2-3; 16:1-3).

உ. வசனம் 7. "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல்...." "பயமுள்ள ஆவி"என்பது, ஒரு பயமுள்ள ஆவி, அச்சமூட்டும் அல்லது கோழையான ஆவி, என்று பொருள்படும். ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் பரிசுத்த ஆவியானவர், ஒரு விசுவாசி தொல்லை அல்லது உபத்திரவத்தை அவனுடைய ஊழியத்தில் சந்திக்கும்போது, அவனுடைய பயம் அல்லது அச்சமடைவதற்கு அவர் காரணமாயிருக்கமாட்டார்

. எப்படி இருப்பினும் அவர் கீழ்க்கண்ட காரியங்களுக்கு மூலாதாரமும், ஆரம்பமுமாயிருப்பார்:

1. அற்புத வல்லமையான அதிசய கிரியைசெய்ய வல்லமை.

2. தியாகம் செய்யும் அன்பு (மற்றவர்களுடைய நன்மைக்காக வெளியிடப்படும்)

3. தன் அடக்கம்- நல்ல நிலையிலுள்ள, கட்டுப்பாட்டிற்குள்ள, தன் சுயத்தை அடக்கி ஆளக்கூடிய மனது, ஆரோக்கியமான, நிலையான மற்றும் சரியான கொள்கைகளை ஏற்றுக்கொண்டு. அதை செயல்முறைப்படுத்தும் மனது என்று இது பொருள்படும். ஒவ்வொரு வெற்றிகரமான ஊழியத்திலும் விசேஷமாக, எங்கே எப்போதும் பொய்ப்போதகர்களால் அச்சுறுத்தப்பட்டும், எபேசுவிலே தீமோத்தேயுவுடைய காரியத்தில் இருந்ததுபோல, மிகுந்த தொல்லையும் உபத்திரவமும் அதோடு சேர்ந்திருக்கும்போது, இக்காரியங்கள் யாவும் தேவைப்படுகிறது. தீமோத்தேயுவின் இளமையும், அனுபவமின்மையும், பவுல் இந்தக் குறிப்பிட்ட வார்த்தைகளை எழுத பவுலை ஏவியிருக்கவேண்டும் (1கொரிந்தியர் 16:10-11; 1தீமோத்தேயு 4:12) எப்படியிருப்பினும், தீமோத்தேவின் பயந்த சுபாவம் அதிகக் காரணமாயிருந்தது.

2. நம்முடைய கர்த்தரைப்பற்றி சாட்சி கூறுவதற்கு வெட்கப்படாதே. (1:8-12).

அ. வசனம் 8. "ஆகையால், நம்முடைய கர்த்தரைப்ப பற்றிய சாட்சியைக் குறித்தாவது, அவர் நிமித்தம் கட்டப்பட்டிருகிற என்னைக் குறித்தாவது, நீ வெட்கப்படாமல்...." "வெட்கப்படுவது" என்றால், அவமானப்படும்உணர்வைப் பெறுவது, ஒருவன் ஒருகாரியத்தைச் செய்யவிடாமல் தடுக்கும்பயம், என்று பொருள்படும்

BELLWETHER INTERNATIONAL
GOOD NEWS PUBLISHERS

ஒரு வாலிப அப்போஸ்தலனுக்குரிய அறிவுரைகள் (2 தீமோத்தேயு 1:6-14)

"நம்முடைய கர்த்தரைப் பற்றிய சாட்சி" என்றால், அனுபவித்த உண்மை நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறுதல், இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் சத்தியங்களை அனுபவ சான்றுகளுடன் சொல்வது என்று பொருள்படும். அவனுக்குள் வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரால், வல்லமையின் அதிகாரம், தியாக அன்பு, மற்றும் ஆரோக்கியமான மனது, ஆகியவைகளைத் தீமோத்தேயு பெற்றிருந்ததினால், கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் சத்தியங்களை அறிவிப்பதற்கும், பவுலோடு கூட்டாளியாக ஐக்கியப்படுவதற்கும் அவன் பயப்படவேண்டிய அவசியமில்லை. அவ்வாறே வேறு எந்த விசுவாசியும் கூட!

ஆ. வசனம்8. "...தேவ வல்லமைக்கேற்றபடி, சுவிசேஷத்திற்காக என்னோடே கூடத்தீங்கநுபவி" "தீங்கநுபவி", என்றால், வருத்தங்களை அனுபவி, கொடுமையாக நடத்தப்படும் ஒருவரோடு பங்கெடுத்துக்கொள். என்று பொருள்படும். ரோமாபுரியில் அவனுடைய சிறையிருப்பின் காலங்களில் பவுல் துன்பத்தை அனுபவித்தான். அத்துடன் சுவிஷேத்திற்காக, அவனுடைய ஊழியகால முழுவதும் மிகுந்த உபத்திரத்தையடைந்தான். *(2:9; 2கொரிந்தியர் 4:8-10,11:23-29)*. அவ்வாறாகவே தீமோத்தேயுவும் அனுபவிக்க ஊக்கப்படுத்தப்பட்டான். எல்லா விசுவாசிகளும், அவ்வண்ணமாகப், போதகர்களும், அப்போஸ்தலர்களும் அவர்களுக்குள் வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் அதிகாரத்தின் மூலமாக, சுவிசேஷ சத்தியங்களுக்குச் சாட்சி கொடுப்பதோடு சம்பந்தப்பட்ட தொல்லைகளை தாங்கிக்கொள்ளக்கூடும் *(வசனம் 7)*.

இ. வசனம் 9-10 "அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும் நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்". பவுல் அவருடைய விவாதத்திற்கு இடையே, இயேசு கிறிஸ்து மூலமாக வெளிப்படுத்தப்பட்ட தேவ கிருபையின் நோக்கத்தைப்பற்றிய கூற்றைக் கூறுகிறார். இது, எபேசியர் *2:8-9* மற்றும் ரோமர் *8:28-30* வசனங்களிலுள்ள, பழைய நினைவுகளின் கருத்துக்கள் இணைந்து, தீமோத்தேயுவுக்கு, (இப்பொழுது, எல்லா விசுவாசிகளுக்கும்) இலவசமாய்க் கொடுக்கப்பட்ட ஊழியத்தின் வரத்தைக்கொழுந்துவிட்டு எரியச் செய்யும்படியாக, அனல்மூட்டி எழுப்புவதற்கு அடிப்படையாகப் பயன்படுகிறது. கள்ளப் போதகர்களின் சவால்களுக்கும், சுவிசேஷத்தினால் கொடுமைகளுக்கும் உபத்திரவங்களுக்கும் மத்தியில் இருக்கும் ஒருவருக்கும், இது உற்சாகத்தைத் தூண்டும் வார்த்தையாகவும், பயன்படும் நோக்கத்தோடு இது இருக்கிறது.

ஈ. வசனம்11. "அதற்கு நான் பிரசங்கியாகவும், அப்போஸ்தலனாகவும், புறஜாதியாருக்குப் போதகனாகவும் நியமிக்கப்பட்டேன். "பிரசங்கி" என்றால் சுவிசேஷத்தை அறிவிக்கிறவன் என்று பொருள்படும். "அப்போஸ்தலன்" சுவிசேஷத்தை அறிவிக்க அனுப்பப்பட்ட இராஜதூதன். அற்புத வல்லமையோடு கிறிஸ்துவால் தலைவனாய் நியமிக்கப்பட்டு அனுப்பப்பட்டவன். "போதகன்" சுவிசேஷத்தின் சத்தியங்களில் மற்றவர்களை அறிவுறுத்திக் கற்றுக்கொடுப்பவன்.

உ. வசனம் 12. "அதினிமித்தம் நான் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன். ஆயினும், நான் வெட்கப்படுவதில்லை, ஏனென்றால் நான்.... அறிவேன்". தீமோத்தேயுவை வெட்கப்படவேண்டாம் என்று உரிமையுடன் கேட்டுக்கொண்டதுபோலவே,

ஒரு வாலிப அப்போஸ்தலனுக்குரிய அறிவுரைகள் (2 தீமோத்தேயு 1:6-14)

சுவிசேஷத்தைக் குறித்துப் பவுல் வெட்கப்படவில்லை. (சுவிசேஷத்தை அறிவிப்பதற்குத் தடையாக பயம் மற்றும் வெட்கம் போன்ற உணர்வுகள் அவருக்கு இல்லை) ஆகிலும், விசுவாசிகள், சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு தடையாக வெட்கம் மற்றும் பயம் போன்ற உணர்வுகளைப் பெறாமல் இருப்பதற்குக் காரணங்கள் இருக்கிறது. பவுலைப்போல நாமும் கீழ்க்கண்டவாறு கூறலாம்.

1. நாம் விசுவாசிக்கிறவர் இன்னார் என்று அறியவேண்டும்-"அறிவது" என்றால், விரிந்த கண்களோடு குறிப்பிட்ட ஒன்றைப் பார்ப்பது. "இன்னார்" என்பது திட்டமாக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து. "விசுவாசிக்கிறவர்" என்றால், கிறிஸ்துவில் விசுவாசம் மற்றும் நம்பிக்கையை வைத்திருப்பது; ஒருவருடைய ஆவிக்குரிய ஆரோக்கிய நிலையை அவரிடம் நம்பி ஒப்புக்கொடுப்பது என்று பொருள்படும்.

2. நாம் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள்வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன். "காத்துக்கொள்" என்றால் காவல் இருப்பது, காப்பாற்றும்படி கவனமாயிருப்பது, பாதுகாப்பது, என்று பொருள்படும். "நாம் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை" என்பது நம்முடைய சரீரங்கள் உயிர்ப்பிக்கப்பட்டு, அழியாமையைத் தரித்துக்கொள்வதைக் குறிக்கிறது. (வசனம் 10; 1கொரிந்தியர் 15:51-57) "அந்நாள்" என்பது, சபைக்காகக் கிறிஸ்து இயேசு ஆகாயத்தில் வரும் அந்த நாளைக் குறிக்கும் (1தெசலோனிக்கேயர் 4:13-17; 2தெசலோனிக்கேயர் 1:10).

3. முதிர்ந்த அனுபவமுள்ள அப்போஸ்தலர்களிடம் கற்றுக்கொண்டவைகளை சட்டமாகக் காத்துக்கொள். (1:13-14).

1. வசனம் 13 "......என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு" "என்னிடத்தில் கேட்டிருக்கிற" என்பது, அவருடைய நிருபங்களிலும் மற்றும், அவர்களுடைய தூரதேச சுவிசேஷ பிரயாணங்களில் தீமோத்தேயுவின் முன்னிலையில், பவுல் பிரசங்கித்தவைகள் மற்றும் போதித்த சுவிசேஷ சத்தியங்கள் மற்றும் கிறிஸ்தவ நடத்தையைப்பற்றிய கருத்துக்களின் தொகுப்பைக் குறிக்கும். (2:2; மற்றும் 3:10, 1தீமோத்தேயு4:6) இது, தீமோத்தேயுவுடைய சுவிசேஷ போதனைகளை தூய்மையாகவும் கள்ளப்போதகர்களின் போதனைகளிலிருந்து தெளிவாக வேறுபட்டதாகவும் காத்துக்கொள்ளும்.

ஆ. "ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு" என்றால், நீ என்னிடத்தில்கேட்ட, சுவிசேஷ சத்தியங்கள் மற்றும் கிறிஸ்தவ நடத்தைப்பற்றிய அறிவுரைகளின் தொகுப்பை, மாதிரியாகப் பயன்படுத்தவேண்டும், இது, நீ போதிப்பதற்கு உதாரணமாக எடுத்துக்காட்டப்படவேண்டும். "ஆரோக்கியமான" வசனங்கள், என்றால், கேடில்லாத, பலமுள்ள, முழுமையான மற்றும் சுவிசேஷ சத்தியங்களின் உண்மையான போதனை.

இ. மற்றும், தீமோத்தேயு அவனுடைய ஊழியத்தை, "விசுவாசத்தோடும் அன்போடும்" நிறைவேற்றவேண்டும். "நீ கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின்சட்டத்தைக் கைக்கொண்டிரு" (2தீமோத்தேயு1:13 மற்றும், கலாத்தியர் 5:6,22).

ஒரு வாலிப அப்போஸ்தலனுக்குரிய அறிவுரைகள் (2 தீமோத்தேயு 1:6-14)

ஈ. வசனம் 14. "உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட, அந்த நற்பொருளை...... காத்துக்கொள்". "நற்பொருளை" என்பது, பவுலிடம் அவன் கேட்ட, சுவிசேஷ சத்தியங்கள் மற்றும் கிறிஸ்தவ நடத்தைகளைப்பற்றிய அறிவுரைகள், ஆகியவைகளின் தொகுப்பு, தீமோத்தேயுவிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது. (பரிசுத்த ஒப்படைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது) "காத்துக்கொள் என்றால், வசனம்12, உள்ளதுபோல், காவல் இருப்பது காப்பாற்றும்படி கவனமாயிருப்பது; பாதுகாப்பது, என்று பொருள்படும். சுவிசேஷ சத்தியங்கள் மற்றும் கிறிஸ்தவ நடத்தையைப்பற்றிய அறிவுரைகளாகிய, நற்பொருளைப் பரிசுத்த ஒப்படைப்பாக, கள்ளப்போதகர்களிடமிருந்தும், சீர்கேட்டிலிருந்தும் அதைக் காத்துக்கொள்ளவேண்டும் (1தீமோத்தேயு 6:20-21).

உ. வசனம் 14. "நமக்குள்ளே வாசம்பண்ணுகிற, பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்" நாம் மறுபடியும் பிறக்கும் வேளையில், பரிசுத்த ஆவியானவர் நம் ஒவ்வொருவருக்குள்ளும் வாசம்பண்ணும்படியாக வந்துவிடுகிறார். (ரோமர் 8:9; 1கொரிந்தியர் 12:13; யோவான் 14:17, 1கொரிந்தியர் 6:19) அவர், சுவிசேஷ சத்தியங்களை நாம், காவல் காத்துக்கொள்ள, காப்பாற்றும்படி கவனமாயிருக்க, மற்றும் பாதுகாக்க உதவிசெய்கிறார். ஆகவே, தொல்லைகள் மற்றும் உபத்திரவங்களுக்கு எதிராக சுவிசேஷ சத்தியங்களை அறிவிக்க பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவிசெய்கிறது மட்டும் அல்லாமல் (வசனம்8) அதைத் தூய்மையாகவும், பத்திரமாகவும் காத்துக்கொள்ளவும் அவர் உதவிசெய்கிறார். (1யோவான் 2:20,1கொரிந்தியர் 2:12-14).

முடிவுரை

அ. அவருடைய ஆவிக்குரிய குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு பவுலுடைய எச்சரிப்புகள், சபையின் ஆரம்பகாலத்தில் இருந்தவர்களுக்கு இருந்தது போலவே, இன்றும் வாலிப ஆவிக்குரிய தலைவர்களுக்கு (உண்மையில் எல்லா விசுவாசிகளுக்கும்) அவ்வாறே பொருத்தமானதாக இருக்கிறது.

1. தேவனுடைய வரத்தை அனல் மூட்டி எழுப்ப

2. நம்முடைய கர்த்தரைப்பற்றி சாட்சி கூற வெட்கப்படாமல் இருக்க.

3. முதிர்ந்த அப்போஸ்தலர்களிடமிருந்து கற்றுக்கொண்டவைகளைப் போதிப்பதற்குச் சட்டமாகப் பின்பற்ற.

ஆ. சபையின் ஆரம்பகாலத்தில் இருந்ததுபோலவே, இன்றும் மிக அதிகமாக இல்லாவிட்டாலும் அநேகக் கள்ளப் போதகர்கள் இருக்கிறார்கள் மற்றும், விசுவாசிகள் அவ்வாறே அதிக துன்பங்களையும் உபத்திரவங்களையும் சகித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகிலும், "நற்பொருளைப்பத்திரமாகக் காத்துக்கொள்ளவும், நமக்கு விரோதமாக எல்லாம் எதிர்த்து வந்தாலும், அதை அதனுடைய பூரண தன்மையோடு அறிவிக்கப் பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவிசெய்வார்.!

ஒரு வாலிப அப்போஸ்தலனுக்கு மேலும் அதிகமான அறிவுரைகள் (2 தீமோத்தேயு 2:1-9)

முன்னுரை

அ. 2தீமோத்யு 1:15-18, ஆகிய வசனங்கள், அவருடைய வாலிப உடன் ஊழியனுக்குக் கொடுத்துக் கொண்டிருந்த அறிவுரைகளிலிருந்து, சிறிது விலகிச் செல்கிறது. இந்த நான்கு வசனங்களில், ஒநேசிப்போரைத் தவிர "ஆசியா நாட்டிலிருக்கிற யாவரும்" அவனைக் கைவிட்டார்கள், என்பதை பவுல் தீமோத்தேயுவுக்கு ஞாபகப்படுத்தினார்.

ஆ. அதன் பின்பு இரண்டாம் அதிகாரத்தில், எபேசுவில் அதுவரை இருந்த இளம் அப்போஸ்தலனாகிய தீமோத்தேயுவுக்கு அவருடைய அறிவுரைகளை மறுபடியும் துவங்குகிறார்.

1. கிறிஸ்து இயேசுவில் உள்ள கிருபையில் பலப்படு.

2. நீ என்னிடத்தில் கேட்டவைகளை, உண்மையுள்ள மனுஷர்களிடம் ஒப்புவி.

3. தீங்கனுபவித்து, சகித்துக்கொள்

4. கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் நம்மைகளை நினைவுகூரு.

1.ஒருவாலிபஅப்போஸ்தலன்கிறிஸ்துவிலுள்ள கிருபையில் பலப்படவேண்டும் (2:1)

அ. "ஆதலால் என் குமாரனே" தீமோத்தேயு, பவுலுடைய ஆவிக்குரிய குமாரன், என்று இரண்டாவது முறையாகக் குறிப்பிடப்படுகிறது. (1:2; மற்றும் 1தீமோத்தேயு 1:2) ஒரு மிகுந்த கரிசனையுள்ள ஆவிக்குரிய தகப்பனிடமிருந்து கொடுக்கப்பட்ட மிகவும் நேசத்திற்குரிய ஒரு முன்னுரையாக இருக்கிறது. "ஆதலால் என்னுடைய" என்ற சொல் தொடர், 1:6-14 வசனங்களில் ஏற்கனவே கொடுக்கப்பட்ட அறிவுரைகளுடன், 2:1-13 வசனங்களில் கொடுக்கப்போகிற அறிவுரைகளை இணைக்கிறது. இது, ஆசியா பிரதேசத்தில், பவுலைவிட்டு விலகிச் சென்ற மற்றவர்களிடமிருந்து தீமோத்தேயுவை, (ஒநேசிப்போரைப்போல) சிறப்பாகத் தனிப்படுத்தியும் காட்டுகிறது.

ஆ. "பலப்படு" என்றால் திடகார்த்தமாக எப்போதும் காத்துக்கொள்வது. வல்லமையினால் நிரப்படுவது, உன்னில் வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து அதிமான பலனைப் பெற்றுக்கொள்வது (வசனம்14).

இ. "கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில்" விசுவாசத்தின் மூலமாகக் கிருபையினால் (தகுதியற்றவர்களுக்குக் காட்டப்படும் தேவனுடைய சிறப்புச் சலுகை) நாம் இரட்சிக்கப்பட்டிருந்தாலும், (எபேசியர் 2:8-9; ரோமர் 5:2) அவர்கள் அனுதினமும் கிறிஸ்துவ வாழ்க்கை வாழ்வதற்குப் பலப்படுத்தப்படவும், கிறிஸ்தவர்கள் அதற்கு ஏற்றவாறு ஜீவிக்கக் கூடியவர்களாக இருக்கவும், அது கிறிஸ்துவில் மட்டும் காணப்படும் தேவனுடைய கிருபையாக இருக்கிறது.

ஈ. ஆகவே, ஒரு அப்போஸ்தலன், தேவனுடைய கிருபையினாலே பலவானாக நிலைத்திருக்க முடியும் ஒரு கனிகொடுக்கும் நிலைத்த ஊழியம் அவனுக்குத் (அப்போஸ்தலனுக்கு) தொடர்ந்து இருக்கவேண்டுமானால், எல்லா விசுவாசிகளையும்போல, அவன் இதை, மனதால் காத்துக்கொள்வது நல்லது'.

ஒரு வாலிப அப்போஸ்தலனுக்கு மேலும் அதிகமான அறிவுரைகள் (2 தீமோத்தேயு 2:1-9)

2. முதிர்ச்சியடைந்த அப்போஸ்தலர்களிடமிருந்து அவர்கள் கேட்டகாரியங்களை உண்மையுள்ள மனிதர்களிடம், ஒரு இளம் அப்போஸ்தலன் ஒப்படைக்கவேண்டும். (2:2)

அ. "நீ என்னிடத்தில் கேட்டவைகளை" "நீ என்னிடத்தில் கேட்டவைகள்,"என்பது, அவருடைய நிருபங்களிலும், அவர்களுடைய சுவிசேஷ ஊழிய பயணங்களில், தீமோத்தேயுவின் முன்னிலையில்பவுல் பிரசங்கித்த மற்றும் போதித்ததுமான, சுவிசேஷ சத்தியங்கள் மற்றும் கிறிஸ்தவ நடத்தை சம்பந்தப்பட்ட அறிவுரைகளின் தொகுப்பைக் குறிக்கும் (1:13, மற்றும் 3:10; தீமோத்தேயு 4:6)

ஆ. "அநேக சாட்சிகளுக்கு முன்பாக" இது, எபேசுவில் இருந்த மற்ற அநேகரையும், மற்ற இடங்களில், பவுலின் மூலமாக சுவிசேஷ சத்தியங்களை நேரடியாகக் கேட்டவர்களையும், அவனுடைய நிருபங்களை வாசித்தவர்களையும், அநேகமாக இது குறிப்பிடுகிறது.

இ. "உண்மையுள்ள மனிதர்களிடம் ஒப்புவி" "ஒப்புவி" என்றால் கொடுத்துவிடு, பாதுகாப்பிற்காக நற்பொருளை ஒப்படைத்துவிடு, பத்திரமாகக் காப்பாற்றும்படி கொடுத்துவை, என்று பொருள்படும். "உண்மையுள்ள மனிதர்களிடம்" என்பது, நம்பத்தகுந்த, பொருப்பானவர்களைக் குறிப்பிடுகிறது. தீமோத்தேயுவை ரோமபுரிக்கு அவரிடம் வரும்படியாக அழைப்பதற்கான நோக்கத்துடன் பவுல் இதைக் கூறுகிறார். (4:9,21) தீமோத்தேயு அவ்விடத்தை விட்டுவரவேண்டுமானால், பவுலிடமிருந்து அவன் பெற்றுக்கொண்ட, கிறிஸ்தவ சத்தியங்களின் தொகுப்பை எபேசு சபையிலுள்ள மற்ற உண்மையுள்ள மனிதர்களிடம் அவன் ஒப்படைக்கவேண்டும். இங்கே இந்தக் குறிப்பு அநேகமாக, 1தீமோத்தேயு 3:1-7 மற்றும் 5:17-18 வசனங்களில் உள்ள மூப்பர்களை (போதர்களை குறிப்பிடலாம் மற்றும் தீத்து 1:6-9)

ஈ. ஒவ்வொரு சபையிலும், ஆவிக்குரிய தலைவர்கள் இல்லாமல் இருக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு. இக்காரணத்தினால் மற்ற உண்மையுள்ளவர்களும் நம்பத்தகுந்தவர்களுமான ஆண்கள் (மற்றும் பெண்கள்) போதிக்கும் மற்றும் பிரசங்கிக்கும் ஊழியத்தை, போதகர் இல்லாத தருணங்களில் தொடர்ந்து செய்யவேண்டும்! மற்றும் சபையை நிலைநாட்டிய அப்போஸ்தலன் மற்றும் அல்லது புதிதாக மனம்திரும்பின சீடர்கள், அவன் (போதகர்) சபையின் தலைமைப் பதவியை, மற்ற நம்பகமான ஆண் மற்றும் பெண்ணிடம் கொடுக்கப்போகும் நாளை எதிர் நோக்கியிருக்க வேண்டும்!

உ. "மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க" மற்றவர்களுக்குப் "போதிக்கத்தக்க"வர்கள் உயர்ந்த தகுதிபெற்ற போதகர்களாகவும் விசுவாசத்தால் சாரம் ஏற்றப்பட்டவர்களாகவும் இருக்கவேண்டும். மற்றும் நடத்தையில், சன்மார்க்கத் தகுதிபெற்றவர்களாகவும், அவர்கள் இருக்கவேண்டும்! அவர்களுடைய மந்தைமேய்க்கும் மற்றும் போதிக்கும் ஊழியங்கள், ஒரு அப்போஸ்தலனுடைய ஊழியத்தைப்போல், அவர்களுடைய தனிப்பட்ட மற்றும் சமூகவாழ்க்கையிலிருந்து, பிரிக்கப்படக்கூடியதல்ல.

3. ஒரு வாலிப அப்போஸ்தலன் துன்பங்களை சகிக்கவேண்டிய அவசியம் நேரிடுகிறது (2:3-7)

அ. வசனம் 3-6 "நீயும்.... தீங்கனுபவி" "தீங்கனுபவி" என்றால், தொந்தரவுகளைச் சகிக்கவேண்டும், சுவிசேஷத்திற்காகத் தொல்லைகளையும்,

ஒரு வாலிப அப்போஸ்தலனுக்கு மேலும் அதிகமான அறிவுரைகள் (2 தீமோத்தேயு 2:1-9)

உபத்திரவங்களையும் அனுபவிக்கவேண்டும், என்று பொருள்படும். "எங்களுடன் (மற்ற அப்போஸ்தலர்களுடன்) கொடுமைகளை அனுபவி" என்பதை விளக்க மூன்று உதாரணங்களைப் பவுல், தீமோத்தேயுவுக்குத் தருகிறார்.

1. இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாக-இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் ஒரு நல்ல போர்ச்சேவகன், வேறு எந்த ஒரு நல்ல போர்ச்சேவகனைப்போல, யுத்தத்தில் விரோதியுடன் சண்டையிடும்போது, அவனுடைய பங்காகிய துன்பங்களை அனுபவிப்பான். (2கொரிந்தியர் 10:3-5; எபேசியர் 6:10-17 பிலிப்பியர் 2:25; பிலேமோன் வசனம் 2). கிறிஸ்துவின் ஒரு நல்ல போர்ச்சேவகன் யுத்தம் செய்வதை இடையில் விட்டு (ஆசியாவின் பிரதேசங்களிலுள்ள அநேகரைப்போல) விட்டு இந்த உலக வாழ்க்கையின் காரியங்களைப் பின்தொடர்ந்து சென்று அதில் ஈடுபடமாட்டான். அவன், அவனுடைய சேனாதிபதியின் கட்டளைகளுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து, அவசியமானான். மரண பரியந்தம், துன்பங்களையும் சகிப்பான். (லூக்கா 14:26-27; மத்தேயு 10:35-37).

2. ஒருவன் மல்யுத்தம் பண்ணினால்...இயேசுகிறிஸ்துவின் மல்யுத்த வீரன் விளையாட்டின் சட்டங்களுக்கு ஏற்றாற்போல் போட்டியிடவேண்டும்: 1. அவன் எந்த விளையாட்டில் போட்டியிடுகிறானோ, அதற்கு முற்றிலும் தன்னை அர்ப்பணிக்கவேண்டும். 2. போட்டியிடும்போது அனுபவிக்கவேண்டிய சரீர துன்பங்களையும், களைப்பையும் சகிக்கவேண்டும். சட்டத்தின்படி போட்டியிடுகிறவர்கள்; வெற்றி வீரனின் நீதியின் கிரீடத்தைப் பெற்றுக்கொள்ளுவார்கள். (நித்திய ஜீவன்-4:8, மற்றும், 1கொரிந்தியர் 9:24-27; யாக்கோபு 1:12; 1 பேதுரு 5:4; வெளிப்படுத்தினவிசேஷம் 2:10) ஆனால், இடையில் விட்டு விடுகிறவர்களும் சட்டத்தை மீறுகிறவர்களும் தகுதியற்வர்கள் என்று தீர்க்கப்படுவார்கள் மற்றும் ஓட்டத்தின் முடிவில் வெற்றிவீரனின் கிரீடத்தையும் பெற்றுக்கொள்ள மாட்டார்கள்!

3.பிரயாசப்பட்டுபயிரிடுகிறவன்-"பிரயாசப்பட்டு", என்றால், கடினமாக வேலைசெய்வது, ஒருவன் சோர்வடைந்து இனி ஒன்றும் செய்யமுடியாத அளவிற்குக் களைப்படைவது, என்று பொருள்படும். கடின உழைப்பினால் மிகுந்த விளைச்சலை அறுவடையசெய்யும் ஒரு விவசாயினைப்போல, அர்ப்பணிக்கப்பட்ட, கடினமாக உழைக்கும் அப்போஸ்தலன் (அல்லது எந்த ஒரு விசுவாசியும்) நித்திய ஈவுகளாகிய மிகுந்த விளைச்சலை அறுவடைசெய்வான்.

ஆ. வசனம் 7. "நான் சொல்லுகிறவைகளை சிந்தித்துக்கொள்" "சிந்தித்துக்கொள்" என்றால், கவனிப்பது, ஆலோசித்துச்செய்வது, யோசித்துப்பார்த்து விளங்கிக்கொள்வது, என்று பொருள்படும். "நான் சொல்லுகிறவைகளை" என்பது, மூன்று உதாரணங்களைக் குறிக்கிறது". (போர்ச்சேவகன், மல்யுத்தக்காரன், விவசாயி) ஒரு அப்போஸ்தலனாகதீமோத்தேயு அனுபவிக்கப்போகும் வருத்தங்களையும் உபத்திரவங்களையும் தொல்லைகளையும் அவர்களோடு (மூன்று உதாரணங்களோடு) சம்பந்தப்படுத்தி பவுல்சிறிது நேரத்திற்குமுன் விவரித்தார். ஒருவன் அவனுடைய அழைப்புக்கு உண்மையாக, இவை எல்லாவற்றினூடேயும் (துன்பங்கள்) நிலைத்திருந்தால், அவன் நித்திய ஜீவனையும், கிறிஸ்துவோடு ஆளுகை செய்யும் சிலாக்கியத்தையும் பெற்றுக்கொள்ளுவான் என்பதையும் இது சுட்டிக்காட்டுகிறது. (வசனம் 11-12).

ஒரு வாலிப அப்போஸ்தலனுக்கு மேலும் அதிகமான அறிவுரைகள் (2 தீமோத்தேயு 2:1-9)

வசனம் 7. "கர்த்தர் எல்லாக் காரியங்களிலும் உனக்குப் புத்தியைத் தந்தருளுவார்" "புத்தியைத் தந்தருளுவார்". என்றால், எல்லா அறிவையும் சேர்த்து மனதில் காத்துக்கொள்ளும் திறனைத் தருவார் என்று பொருள்படும். உபத்திரங்களைச் சகித்துக் கொள்ளவேண்டிய அவனுடைய தேவையான நேரத்தில், பவுலுடைய மூன்று உதாரணங்களையும் அவைகளோடு உள்ள சம்பந்தத்தையும், தொடர்புடுத்தத் தீமோத்தேயு துர்அதிர்ஷ்டவசமாகத் தவறிவிட்டால், பரிசுத்த ஆவியானவர் அவன் விளங்கிக் கொள்ள உதவிசெய்வார் (சிறப்பாக, அவன் வருத்தங்களை ஊழியத்தில் அனுபவிக்கும்போது).

4. ஒரு வாலிப அப்போஸ்தலன், கிறிஸ்துவின் சுவிசேஷத்துடைய நன்மைகளை தன்னுடைய ஞாபகத்தில் வைத்துக் காத்துக்கொள்ளுகிறான். (2:8-9)

அ. வசனம் 8. "தாவீதின் சந்ததியில் பிறந்த இயேசு கிறிஸ்து..மரித்தோரிலிருந்தெழுப்பப்பட்டவரென்று நினைத்துக்கொள்". "நினைத்துக்கொள்" என்றால், மனதிற்கு மறுபடியும் கொண்டுவருவது, மனதில் திரும்ப ஞாபகத்திற்கு வரும்படி செய்வது, மனதில் திருப்பிப்பார்ப்பது, என்று இங்கே பொருள்படும். தீமோத்தேயு, இயேசு கிறிஸ்துவின் மீது அவனுடைய மனதை ஒருமுகப்படுத்தும்படியாகக் கொஞ்சநேரத்தைச் செலவிடவேண்டுமென்று, பவுல் விரும்புகிறார். கிறிஸ்துவின்மீது ஒருமுகப்படுத்தவேண்டும்:

1. மரித்தோரிலிந்தெழுப்பப்பட்டவர் இது மரணத்தின்மீது கிறிஸ்துவினுடைய வெற்றியை நிரூபிக்கிறது. அத்துடன், அவருக்காகத் துன்பங்களை அனுபவிக்கும் தீமோத்தேயுவுக்கு ஊக்கத்தையும், பெலனையும் அளிக்கிறது, கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதினால், அவருக்கு உண்மையாக நிலைத்திருப்பவர்களும் (விசேஷமாக தொல்லை, துன்பம் மற்றும் உபத்திரங்களின் மத்தியில்-வசனம் 5-7,11; மற்றும் 1கொரிந்தியர் 15:49,57-58; ரோமர்8:29-30) உயிர்ப்பிக்கப்படுவார்கள். கிறிஸ்துஜீவித்துக் கொண்டிருப்பதினால், தீமோத்தேயு அழைக்கப்பட்ட ஊழியத்தைச் (மற்றும் உபவத்திரங்கள்) செய்வதற்கு பலப்படுத்தவும் (பரிசுத்த ஆவியானவர் மூலமாக) வல்லவராயிருக்கிறார்.

(2) தாவீதின் சந்ததியில் பிறந்தவர் அவருடைய மக்களுக்குத் தேவனுடைய வாக்குத்தத்தின் நிறைவேறுதலாகக் கிறிஸ்து இருக்கிறார். (மத்தேயு 1:1, லூக்கா 1:32; 2சாமுவேல் 7:13 ஏசாயா 9:6-7) அவருக்கு உண்மையாக நிலைத்திருப்பவர்களுக்கு அவர் உண்மையுள்ளவராக இருக்கிறார் என்ற நிச்சயத்தை தீமோத்தேயுவுக்குத் தருவதற்காக இது கூறப்படுகிறது. (வசனம் 13)சுவிசேஷத்திற்காகத் தொல்லைகள் மற்றும் துன்பங்கள் மத்தியில், தீமோத்தேயு உண்மையாக நிலைத்திருந்தால், அவனுடைய நித்தியமான ஈவுகளைப் பெற்றுக்கொள்ளுவான் (வசனம் 5-7, 11).

ஆ. வசனம் 9. "இந்தச் சுவிசேஷத்தின் நிமித்தம், நான் பாதகன்போலக் கட்டப்பட்டு, துன்பத்தை அனுபவிக்கிறேன்". தாவீதின் சந்ததியிலிருந்து தோன்றின, கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார் என்ற சுருக்கமான விளக்கம், "கிறிஸ்துவில் வைக்கப்பட்ட விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிப்பு" என்ற பவுலுடைய சுவிசேஷமாயிருக்கிறது. கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை "அவருடைய சுவிசேஷம்" என்று பவுல் அழைத்தபோதிலும், அவரிடம் ஒப்புவிக்கப்பட்ட சுவிசேஷம் என்றே, பொருள்படும்படியாகக் கூறுகிறார். (கலாத்தியர் 1:12, மற்றும் 1தீமோத்தேயு 1:1; ரோமர் 2:16; 16:25).

ஒரு வாலிப அப்போஸ்தலனுக்கு மேலும் அதிகமான அறிவுரைகள் (2 தீமோத்தேயு 2:1-9)

இ. நீரோ, அரசனுக்கடியில், ரோமாபுரியில், அவருடைய இரண்டாம் சிறையிருப்பின்போது, இந்த இரண்டாம் நிருபத்தைப் பவுல் தீமோத்தேயுவுக்கு அநேகமாக எழுதியிருக்கவேண்டும். அவருடைய முதல் சிறையிருப்பின்போது இருந்ததுபோல வீட்டுக் காவலில் இராமல், சாதாரண ஒரு குற்றவாளியைப்போல, குளிர்ந்த, சிறிய இருண்ட அறையில் வைக்கப்பட்டார். (1:16; 4:13).

ஈ. வசனம் 9. "தேவ வசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை" "கட்டப்படுவது" என்றால் பிணைக்கப்பட்டிருப்பது, முடிந்து வைத்திருப்பது, என்று பொருள்படும். இந்த நிருபத்தைப் பவுல் எழுதும்போது இருந்ததுபோல் அல்லாமல், சுவிசேஷ செய்தி சங்கிலிகளால் கட்டப்படவில்லை. விசுவாசிக்கிற எல்லாராலும் சிறப்பாக தீமோத்தேயுவைப்போல், இதற்காக கொடுமைகளையும் அல்லது இரத்த சாட்சியின் மரணத்தையும் சகிக்க விரும்புகிறவர்களாலும் இது அறிவிக்கப்படும். தாவீதின் சந்ததியில் தோன்றின எழுப்பப்பட்ட கிறிஸ்து, அவர்களுடைய தேவை மிகுந்த நேரத்தில், அவர்களை பலப்படுத்தவும் ஊக்கப்படுத்தவும் அவர்களோடு இருப்பார்; மற்றும், அவர்களுடைய நித்தியமான சுதந்தரத்தைப்பற்றி, அவர்களுக்கு ஞாபகப்படுத்துவார்!

முடிவுரை

அ. இந்தக் குறிப்புவரை, சுவிசேஷத்தினிமித்தமாகச் சிறையில் இருக்கும், முதிர்ச்சியடைந்த அப்போஸ்தலன், கீழ்க்கண்டவற்றை, அவனுடையவாலிப உடன் ஊழியனுக்குக் கூறினார்.

1. தேவனுடைய வரத்தை அனல்மூட்டி எழுப்ப வேண்டும்.

2. நம்முடைய கர்த்தரைப் பற்றி சாட்சி கூற வெட்கப்படக்கூடாது.

3. அவரிடமிருந்து கற்றுக்கொண்டவைகளைப், போதிப்பதற்குச் சட்டமாகக் காத்துக்கொள்ளவேண்டும். (1:6-14).

4. கிறிஸ்துவில் இருக்கும் கிருபையில் பலப்படவேண்டும்.

5. நீ என்னிடம் கேள்விப்பட்ட காரியங்களை, உண்மையுள்ள மனிதர்களிடம் ஒப்புவி.

6. உபத்திரவங்களைச் சகித்துக்கொள்.

7. சுவிசேஷத்தின் நன்மைகளை ஞாபகப்படுத்திக்கொள். (நீ பெற்றுக்கொள்ளப் போகும் நன்மைகள் (2:1-9).

(ஆ) நம்முடைய அடுத்த வேதபாகத்தில், தீமோத்தேயுவுக்குப், பவுல் அவருடைய அறிவுரைகளைத் தொடர்ந்து கூறுவார். (2:14-26).

1. சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து சரியாகப் பயன்படுத்தவேண்டும்.

2. பாலியத்திற்குரிய இச்சைகளுக்கு விலகி ஓடு.

3. உன்னை எதிர்க்கிறவர்களுக்குச் சாந்தமாய் உபதேசிக்கவேண்டும்.

தேவனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வேலையாள் (2 தீமோத்தேயு 2:14-26)

முன்னுரை

அ. இந்த நிருபத்தில் இந்தக் குறிப்புவரை, பவுல், அவருடைய ஆவிக்குரிய குமாரனும், வாலிப அப்போஸ்தல உடன் ஊழியனுக்கு அவனுடைய தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் அப்போஸ்தல ஊழியம் இப்பொழுது எபேசுவில் (1:6-14; 2:1-9) சம்பந்தப்பட்ட காரியங்களைப்பற்றி அறிவுரை கூறினார்.

ஆ. இந்த வேத பாகத்தில், கள்ளப்போதகர்களை எதிர்ப்பது அவசியம் என்பதைத் தீமோத்தேயுவுக்குச் சுட்டிக்காட்டி, அவருடைய அறிவுரைகளைத் தொடர்ந்து கூறுகிறார். அவர் இதைத் தவிர்ப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளையும் கொடுக்கிறார்.

1. தேவனால் அங்கீகரிக்கப்பட்ட ஒருவேலையாள், சத்தியவார்த்தையை சரியாகப்பகுத்தறிந்து பயன்படுத்தவேண்டும் (2:14-21).

அ. வசனம் 14. "இவைகளை அவர்களுக்கு நினைப்பூட்டு" "இவைகளை" என்பது, 2:11-13, வசனங்களில் கூறப்பட்ட, "இந்த வார்த்தை உண்மையுள்ளது" என்பதைப்பற்றியதாக இருக்கலாம். அரிபிளவைப்போன்ற பொய் போதகர்களின் நிமித்தமாக (வசனம் 17-19) எபேசுவிலிருந்த விசுவாசிகளுக்கு இவைகளைப்பற்றிய காரியங்களை இடைவிடாமல் நினைப்பூட்டவேண்டியது அவசியமாயிருந்தது.

ஆ. வசனம் 14. "கேட்கிறவர்களைக் கவிழ்த்துப்போடுகிறதற்கேதுவான வாக்குவாதம் செய்யாதபடிக்குக் கர்த்தருக்கு முன்பாக அவர்களுக்கு எச்சரித்து புத்திசொல்லு" கர்த்தருக்கு முன்பாக எச்சரித்து, என்றால் பயபக்தியோடு தனிப்பட்ட வாழ்க்கையில் அனுபவித்த உண்மை சம்பவங்களை எடுத்துக்கூறுவது அல்லது சாட்சி அளிப்பது. (1தீமோத்தேயு 5:2; 2தீமோத்தேயு 4:1) அவர்களுடைய கிரியைகளுக்குத் தனிப்பட்ட முறையில் கணக்குக் கேட்டும், தேவனுடைய பிரசன்னத்தில், அவருடைய எச்சரிக்கை கொடுக்கப்பட்டதாக, தீமோத்தேயு விசுவாசிகளை ஞாபகப்படுத்தவேண்டும். தர்சமயம் உள்ள காரியம் "வார்த்தைகளைப் பற்றிய வாக்குவாதம்" . இது கள்ளப்போதகர்களுடைய ஒரு கைதேர்ந்த தந்திரத்தைக் குறிப்பிடுகிறது. (1 தீமோத்தேயு 2:8, 6:4-5, தீத்து 3:9) விசுவாசிகளை எபேசுவிலுள்ள கள்ளப்போதகர்களால் கூறப்படும் வெறுமையான எதும், நோக்கமற்றதும் மற்றும் துணிந்து மேற்கொள்ளும், வார்த்தைகளைப் பற்றிய (அற்பமானதும் முக்கியமற்றதுமான கருத்துக்கள்) வாக்குவாதத்தில் ஈடுபடக்கூடாது. (வசனம் 16).

இ. வசனம் 14. "ஒன்றுக்கும் பிரயோஜனம் இல்லாமல் கேட்கிறவர்களைக் கவிழ்த்துப்போடுகிறதற்கேதுவானது..." "ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாமல்" என்றால் வார்த்தைகளைப் பற்றிய வாக்குவாதம், விசுவாசிகளுக்கு ஒரு நன்மையும் தரமுடியாது. இது பயனற்றதும், முற்றிலும் ஒரு நன்மையும் கொடுக்கக்கூடாததாக இருக்கிறது. "கவிழ்த்துப்போடுகிறதற்கேதுவானது" என்றால், தலைகீழாவது, அல்லது முற்றிலும் அடுத்தபக்கம் திருப்பப்படுவது, குழப்பத்தை உண்டாக்குவது, முற்றிலும் உடைத்துப்போடுவது அல்லது தோற்கடிப்பது, தேவனுடைய கொள்கைகளைவிட்டு விலகிச்செல்வது (கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தை விட்டு விலகிச்செல்வது).

தேவனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வேலையாள் (2 தீமோத்தேயு 2:14-26)

ஈ. வசனம் 15. "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு." "ஜாக்கிரதையாயிரு" உடனடியாகச் செய், எல்லா முயற்சிகளையும் எடு, கீழ்க்கண்டவாறு, உண்மையாகவும், தாமதமின்றியும், தேவனுக்கு முன்பாக உன்னை நிறுத்து:

1. அங்கீகரிக்கப்பட்டவனாக-ஏற்றுக் கொள்ளப்பட்டவனாக, சோதிக்கப்பட்டவனாக மற்றும் நிரூபிக்கப்பட்டவனாக.

2. வெட்கப்படாத ஒரு ஊழியக்காரனாக "ஊழியக்காரனாக" என்றால் பாடுபட்டு, வேலைசெய்கிற ஒரு போதகரை இங்கு குறிக்கிறது. தேவனால் இவனுடைய வேலை ஆய்வுசெய்யப்படும்போது, இந்த நபர் எந்தக்காரணத்தை முன்னிட்டும் வெட்கப்பட அவசியமில்லை.

3. சத்தியவசனத்தை சரியானபடி பகுத்தறிந்து பயன்படுத்துகிறவனாக இருக்கவேண்டும். "சரியானபடி பகுத்தறிந்து பயன்படுத்துகிறவனாக" என்றால், ஒரு சரியான வழியைப் பற்றிப் பிடித்துக்கொள்வது, ஒரு நேரான உழுவது காலை உழுவது; கள்ளப் போதகர்களால் புதிதாக முன்னுரைக்கப்பட்ட கருத்துபொருள், மற்றும் அற்பமான வார்த்தைகள் ஆகியவைகளின்பேரில், வாக்குவாதம்செய்து, பக்கவழியில் செல்வதை விட்டு, நேரான பாதையில் சத்தியவசனத்தின்படி வழி நடத்தவேண்டும். "சத்திய வசனம்" என்பது, தீமோத்தேயு, பவுலிடமிருந்து பெற்றுக்கொண்ட, சுவிசேஷ சத்தியம் மற்றும் கிறிஸ்தவ நடத்தை ஆகியவைகளின் தொகுப்பைக் குறிக்கும். (1:13-14)

ஈ. வசனம் 16. "சீர்கேடான வீண்பேச்சுகளுக்கு விலகியிரு; அவைகளால் அவர்கள் (கள்ளப் போதகர்கள்) அதிக அவபக்தியுள்ளவர்களாவார்கள்." கருத்துப்பொருள், இப்பொழுது, வசனம் 14 மற்றும் "வசனத்தைப்பற்றியவாக்குவாதம்" என்பவைகளுக்குத் திருப்பப்படுகிறது. "விலகியிரு" என்றால், அதிலிருந்து தூரமாய் தள்ளியிரு, தனியாய்பிரிந்து இரு, என்று இங்கே பொருள்படும். "சீர்கேடான வீண்பேச்சு" என்பது, துன்மார்க்கமான மக்கள் (இங்கே கள்ளப்போதகர்கள்-1தீமோத்தேயு 6:20) பேசும், வெறுமையானதும் கனியற்றதுமான பொல்லாதவற்றைப்பற்றி விவாதம் செய்வது. "அவைகளால், அவர்கள், அதிக அவபக்தியுள்ளவர்களாவார்கள்" என்பது, கள்ளப்போதகர்களாவார்கள். ஆனால், நாம் பார்க்கபோவதுபோல், இது அவர்களோடு இணைந்து உள்ளவர்கள் மற்றும் சத்திய வசனத்தைத் தவறாகப் பகுத்தறிபவர்கள் போதிப்பதற்கு செவிசாய்ப்பவர்களையும் உள்ளடக்கும்.

உ. வசனம் 17-18 "அவர்கள் வார்த்தை அரிபிளவைப்போலப் படரும் இமெநேயும் , பிலேத்தும் அப்படிப்பட்டவர்கள். அவர்கள்சத்தியத்தைவிட்டுவிலகி..... " "அரிபிளவையைப் போலப் படரும்" என்றால், கள்ளப்போதகர்களுடையவார்த்தைகள், ஜீவனைசபையின் ஜீவன் முற்றிலும் அழிக்கப்படும்வரைப்படிப்படியாக அரித்துத்தின்றுவிடும். ஆகவே, அவர்களோடு உள்ள சம்பந்தத்தை என்ன இழப்பு நேரிட்டாலும் கண்டிப்பாகத் தவிர்க்கவேண்டும்.

தேவனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வேலையாள் (2 தீமோத்தேயு 2:14-26)

பவுல், "சாத்தானிடம் ஒப்புக்கொடுத்த" இமெனேயு, (சபையிலிருந்து விலக்கப்படுவதின் மூலமாக தண்டிக்கப்படல்) கள்ளப் போதாகர்களில் ஒருவனாக கண்டறியப்படுகிறான். (1தீமோத்தேயு 1:20) அவன் முடிவில் மேற்கொள்ளப்பட்டான் என்று தெளிவாகத் தெரிகிறது. ஏனெனில் எதிர்த்து நின்று கலகம் செய்த அவனுடைய பக்கமாகப் பிலேத்தும் அலெக்சாண்டரும் இணைந்தனர்.

ஊ. வசனம் 18. "உயிர்த்தெழுதல் நடந்தாயிற்றென்று சொல்லி, சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடுகிறார்கள்" பவுல் இப்பொழுது, அவர்களுடைய பொய் போதகங்களை அடையாளமிட்டுக்காட்டுகிறார்! சபை மகிமையோடு மேகங்களுக்கு மேலாய் எடுத்துக்கொள்ளப்படும் சம்பவம் ஏற்கனவே நடந்துவிட்டது என்றும், நம்முடைய தற்போதுள்ள மாம்ச சரீரம் மகிமைப்படுத்தப்பட்டு உயிர்ப்பிக்கப்படும் (1 கொரிந்தியர் 15:12-19; 2 தெசலோனிக்கேயர் 2:1-2 மற்றும் 1 தெசலோனிக்கேயர் 4:16-17; 1 கொரிந்தியர் 15:20-23, 51-55; ரோமர் 8:11) என்பதை நம்புவதற்குப் பதிலாக, உயிர்ப்பிக்கப்படுவது ஒரு ஆவிக்குரிய அனுபவம் (இரட்சிக்கப்படுவதைப்போல) என்றும் அவர்கள் ஒரு சமயம் கூறியிருக்கவேண்டும். இதன் காரணமாகவும் சிலருடைய விசுவாசம் அழிக்கப்பட்டது (முற்றிலும் கவிழ்க்கப்பட்டது இரகசியமாகக் கவிழ்க்கப்பட்டது) மாம்ச சரீரம் உயிர்ப்பிக்கப்படும் என்ற கொள்கையை முற்றிலும் ஒழித்துவிடவேண்டும் என்று அவர்கள் முயற்சித்தனர்.

ஊ. வசனம் 19. "ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது ... அதற்கு முத்திரையாயிருக்கிறது" "தேவனுடைய உறுதியான அஸ்திபாரம்"என்பது அநேகமாக எபேசுவிலுள்ள சபையைக் குறிக்கும். கள்ளப்போதகர்களினிமித்தமாகச் சிலர் விலகிப்போனபோதிலும் சபை இன்றும் நிலைத்திருக்கிறது! கல்வெட்டில் பதிக்கப்பட்ட இரண்டு கருத்துக்கள் இதற்கு ஆதாரமாக இருக்கிறது. (தேவனுடைய முத்திரை-உரிமையாளர் என்பதை அதிகாரப்பூர்வமாக அறிவிப்பது-அஸ்திபாரக் கல்லின் மீது வார்த்தைகள் செதுக்கப்பட்டுள்ளது- மூலைக்கல்- அவருடைய மாளிகை-எபேசு சபை)

1. "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்" (எண்ணாகமம் 16:5) சபை பாதுகாப்பாக இருக்கிறது. ஏனெனில் தேவன் நெருக்கமாக அறியப்பட்டிருந்தார். மற்றும் அவருடையவர்களைப் பாதுகாக்கிறார் (1கொரிந்தியர்8:3) பொய்யர்களைத் தவிர்த்து, மெய்யான விசுவாசிகளை, அவர் அறிவார்.

2. "கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் நியாயத்தை விட்டு விலகக்கடவன்." (எண்ணாகமம் 16:26) சபை பாதுகாப்பாயிருக்கிறது ஏனெனில் பெரும்பாலானவர்கள், பொல்லாத பொய் போதகர்களிடமிருந்து திரும்பி சென்றுவிட்டனர். (விலகிச் சென்றுவிட்டனர்).

எ. ஆகவே, கள்ளப்போதகர்களால் சிலருடைய விசுவாசம் கவிழ்க்கப்பட்டுப் போனதைக் கருத்தில் கொள்ளாமல், தீமோத்தேயுவும் எபேசுவிலுள்ள, சபையும் ஊக்கமடைய வேண்டும். ஏனெனில், தேவனுக்குச் சொந்தமானது என்று உரிமைப் பாராட்டும் முத்திரை அந்த அமைப்பின் மீது உள்ளது. உற்சாகமூட்டும் இந்த வார்த்தைகள், இன்று உலகமெங்கும் உள்ள தேசங்கள் முழுவதிலும் உள்ள அநேக சபைகள் மற்றும் சபைத் தலைவர்களுக்கு அதிக அவசியமாக இருக்கிறது. செல்வச் செழிப்பு மற்றும், கள்ளப்போதகர்களால் தேவனுடைய இராஜ்ஜியத்தைப் பற்றி போதிக்கும்

தேவனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வேலையாள் (2 தீமோத்தேயு 2:14-26)

போதனைகளை சபையிலுள்ள அநேகரால் ஏற்றுக்கொள்ளப்படும். நாடுகளுக்கு இது சிறப்பாக உண்மையாக இருக்கிறது.

ஏ. வசனம் 20-21 "ஒரு பெரிய வீட்டிலே பொன்னும் வெள்ளியுமான பாத்திரங்களுமல்லாமல், மரமும் மண்ணுமான பாத்திரங்களுமுண்டு. அவைகளில் சில கனத்திற்கும் சில கனவீனத்திற்குமானவைகள். ஆகையால் ஒருவன் இவைகளை விட்டு தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால்...." வசனம் 19, அமைப்பு அல்லது எபேசுவிலுள்ள சபைக்கூட்டத்தின்மீது பவுல் அவருடைய கவனத்தைக் குவிக்கிறார். இங்கே அவர் அங்குள்ள சபை மக்கள்மீது (இரண்டு விதமான மக்கள்) அவருடைய கவனத்தைக் குவிக்கிறார். மரமும், "மண்ணுமான பாத்திரங்கள்.... கனவீனத்திற்கு" என்பது, சபையிலுள்ள கள்ளப்போதகர்களைக் குறிக்கிறது. எபேசுவிலுள்ள தீமோத்தேயு (அல்லது எந்த ஒரு விசுவாசியும்) கள்ளப்போதகர்கள் மற்றும் அவர்களுடைய கொள்கையைக் விலக்கியிருப்பார்களானால், (தவிர்த்து-தங்களை அவைகளிலிருந்து சுத்திகரித்து, தூய்மைப்படுத்திக்கொள்வார்களானால்) அவர்கள், கீழ்க்கண்டவாறு இருப்பார்கள்.

1. வீட்டிலுள்ள கனத்திற்குரிய பொன்வெள்ளி பாத்திரங்களைப்போல் இருப்பார்கள்.

2. பரிசுத்தமாக்கப்பட்டு (தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்டு) எஜமானுக்கு பயன்படுத்தக்கூடியதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டவர்களுமாயிருப்பார்கள்.

2. தேவனால் அங்கீகரிக்கப்பட்ட வேலையாள், பாலிய இச்சைகளுக்கு விலகியிருப்பான். (2:22-24)

அ. வசனம் 22. "பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி...." "விலகியோடி" என்றால், விட்டு ஓடிவிடுவது, தவிர்க்கவேண்டும், பாலியத்துக்குரிய இச்சைகள் இருக்கும் இடத்திலிருந்து தப்பித்து அல்லது மறைந்து ஓடிவிடவேண்டும், என்று இங்கே பொருள்படும். "பாலியத்துக்குரிய இச்சை" என்பது, ஒரு வாலிப நபரோடு சம்பந்தப்பட்ட, தவிர்க்கப்படவேண்டிய காரியங்கள். ஒரு பேராவல், ஆழ்ந்த பற்றாசை, தீவிர மாம்ச உணர்வுகளை இச்சிப்பது. ஒரு வாலிபனுக்குரிய மற்ற சாதாரண காரியங்கள் மற்றும், பொறுமையின்மை, ஆழ்ந்த வாஞ்சை, நவீனமானவைகளில் விருப்பம், சண்டைகளுக்கு காரணமான விவாதம் மற்றும் தர்க்கங்கள். (வசனம் 23-24)

ஆ. வசனம் 22 ".... நீதியையும், விசுவாசத்தையும், அன்பையும், சமாதானத்தையும் அடையும்படி நாடு." நீதியையும், விசுவாசத்தையும், அன்பையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக "நாடிச்செல்வதே", (பெற்றுக்கொள்ளும்படியாக அதிகவேகத்துடன் முன்னேறிச்செல்வது-ரோமர் 12:21; மற்றும் 1 தீமோத்தேயு 6:11;4:12)

1. நீதி-கிறிஸ்துவின் மூலமாக தேவனுடன் ஒரு நேர்மையான தொடர்புடன் இருப்பது. சன்மார்க்கக் காரியங்களில் தூய்மையும் கபடற்றத் தன்மையும்.

2. விசுவாசம்-இரட்சிப்புக்காக, கிறிஸ்துவை சார்ந்திருப்பது.

3. அன்பு-மற்றவர்களிடம் பாசமாக இருப்பது. தியாக சிந்தையுடன் கூடிய அன்பின் கிரியைகள்.

4. சமாதானம்-மற்றவர்களுடன் ஒருமனப்பாட்டுடன் இருத்தல், மற்றவர்களுடன் உள்ள தொடர்பில் சாந்தமாகவும், மன அமைதியுடன் இருப்பது.

தேவனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வேலையாள் (2 தீமோத்தேயு 2:14-26)

இ. வசனம் 22. "---- சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவர்களுடனே, ----" தீமோத்தேயு, எபேசுவில் நீதியையும், விசுவாசத்தையும், அன்பையும், சமாதானத்தையும் நாடி சுத்த இருதயத்தோடு கர்த்தரை நோக்கி ஜெபிக்கிறவர்களுடனே (இஸ்ரவேலின் தேவனையன்றி வேறொருவருக்கும் ஆராதனை செய்யாதவர்களுடன்) சேர்ந்து இருக்கவேண்டும். (1 தீமோத்தேயு 1:5) இக்காரணிகளே, மற்றவர்களிடமிருந்து, தேவனுடைய மக்களைப் பிரித்துக்காட்டுகிறது. (சிறப்பாகப் பொய்ப்போதகர்களை - தீத்து 1:16) ஆகவே, பொல்லாத பாலிய இச்சைகளிலிருந்து விலகி இருக்க தீமோத்தேயுவுக்கு இது உதவிசெய்யும்' "சுத்த இருதயம்" என்பது, சன்மார்க்கக் காரியங்களில் தீட்டுப்படாமலும், தூய்மையாகவும் இருக்கும் ஓர் இருதயம்.

ஈ. "புத்தியீனமும் அயுக்தமுமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்குமென்று அறிந்து, அவைகளுக்கு விலகியிரு." "புத்தியீனமும், அயுக்தமுமான," என்றால் மந்தப்புத்தியுள்ள, சோம்பேறித்தனமான, அறிவற்ற, முட்டாள்தனமான மற்றும் அபத்தமான, என்று பொருள்படும். "தர்க்கங்கள்" என்பது சர்ச்சை செய்யவேண்டி பொருள் அல்லது ஒரு மையக் கருத்தின் பேரில் விவாதம் செய்தல். கடைசியில், அவைகள் சண்டைசெய்வதில் (வாக்குவாதம், சச்சரவு) முடிவடையும்.

உ. வசனம் 24. "கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகச் சமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்கவேண்டும்." கர்த்தருடைய ஊழியக்காரனாகிய தீமோத்தேயு, அவனுடைய நேரத்தை, புத்தியீனமும், அபத்தமானதுமான கருத்துக்களின்பேரில் விவாதம் செய்வதற்குப் (கள்ளப்போதகர்களைப் போல) பதிலாகக், கீழ்க்கண்டவற்றைச் செய்யவேண்டும்.

1. யாவரிடமும் பட்சமுள்ளவனாக இருக்கவேண்டும் - சாந்தமாக, இனிமையாக, மரியாதையுடன் இருக்கவேண்டும்.

2. போதகச் சமர்த்தனாக இருக்கவேண்டும் - திறமையுள்ள உபதேசம் செய்கிறவர் அல்லது போதிக்கிறவராயிருக்கவேண்டும்.

3. சண்டை பண்ணுகிறவனாயிருக்கக்கூடாது - தீய எண்ணத்துடன் தன்னிடம் நடந்துகொள்ளுகிறவர்களிடமும் சகிப்புத்தன்மையுடன் இருக்கவேண்டும்.

3. தேவனால் அங்கீகரிக்கப்பட்ட வேலையாள், அவனை எதிர்க்கிறவர்களுக்கு சாந்தமாய் உபதேசிப்பான். (2:25-26)

அ. வசனம் 25. "எதிர்பேசுகிறவர்கள் ---- சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்கவேண்டும்." "எதிர்பேசுகிறவர்கள்" என்றால், ஆரோக்கியமான உபதேசத்திற்கு எதிரான காரியங்களை "மாம்ச சரீரம் உயிர்த்தெழுவது இல்லை" - வசனம் 18 போன்றவைகள்) விசுவாசிக்கும்படி கள்ளப் போதகர்களால் வஞ்சிக்கப்பட்டவர்களை அநேகமாகக் குறிக்கும். "சாந்தமாய் ---- உபதேசிக்கவேண்டும்" என்றால், அவர்களுக்கு (மறு) பயிற்சியளிக்கும்போதும் கற்றுக்கொடுக்கும்போதும், திருத்தும்போதும், கண்டிக்கும்போதும், விநயமாக எடுத்துக் கூறவேண்டும்.

தேவனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வேலையாள் (2 தீமோத்தேயு 2:14-26)

ஆ. வசனம் 25. "--- சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும் ----" "மனந்திரும்புதல்" என்றால், ஆரோக்கியமற்ற உபதேசத்தைப்பற்றி அவர்கள் எடுத்த தீர்மானங்களை விட்டு முற்றிலும் திரும்பி, புதுப்பிக்கப்படத்தக்கதாக மனச்சாட்சியில் குற்றத்தை உணரும் அனுபவத்தைப் பெறுவது. சத்தியத்தைப்பற்றிய அறிவை அடைவதற்கு முன்னால் இது நடைபெறவேண்டும். (இரட்சிப்பின் சுவிசேஷத்தை பற்றிய அறிவு - 1 தீமோத்தேயு 2:4) சுவிசேஷத்தைப்பற்றிய சத்தியத்தில் தவறுவதில் நிலைத்திருந்தால் அவர்களுடைய இரட்சிப்பை இழந்துவிடக்கூடும். மற்றும் இழந்துவிடுவார்கள்! உயிர்த்தெழுதலில் உள்ள நம்பிக்கையை இழந்து விடுபவர்களுக்கு இது நிச்சயமாக நடைபெறும்!

இ. வசனம் 26. "---- அவர்கள் மறுபடியும் மயக்கம் தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும் ----" "மறுபடியும் மயக்கம் தெளிந்து" என்றால் நிதானமான மனநிலையைப் பெற்றுக்கொள்ளுவது, சுவிசேஷ சத்தியங்கள் தொடர்பான தெளிந்த ஆரோக்கியமான மனதை உடையவர்களாவது, என்று பொருள்படும். "நீங்கத்தக்கதாக" என்றால், "பிசாசினுடைய கண்ணியிலிருந்து" (கட்டப்பட்ட சுருக்கு, பிசாசினுடைய தந்திரமான நோக்கம் அல்லது சோதனையில் வஞ்சிக்கப்படுவது) தப்பித்துக்கொள்வது, என்று பொருள்படும்.

ஈ. வசனம் 26. "பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிக்கப்பட்டிருக்கிற அவர்கள் ---" அவர்கள், யுத்தக் கைதிகளாக உயிரோடு பிடிக்கப்பட்டவர்கள் என்று, இது பொருள்படும். அவர்கள் இப்பொழுது சாத்தானுடைய அதிகாரத்திற்குக் கீழ் இருக்கிறார்கள் ஆகவே, தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்குப் பதிலாக, பிசாசினுடைய சித்தத்தை செய்கிறார்கள்.

உ. பிசாசின் பொய்யான கொள்கைகளை நம்பும்படியாகச் செய்து, கிறிஸ்துவிலுள்ள அவர்களுடைய விசுவாசத்தையும் உயிர்த்தெழுவதிலுள்ள அவர்களுடைய நம்பிக்கையையும் இழந்தவர்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆகிலும், கீழ்க்கண்ட பண்புகளையுடைய ஒரு தாழ்மையான போதகர் அல்லது அப்போஸ்தலன் ஆகிய இவர்களால் மட்டுமே சாத்தியமாகும்:

1. சுவிசேஷ சத்தியங்களை அறிந்தவர்கள்.

2. போதிக்கும் திறமை படைத்தவர்கள்.

3. வழி விலகிச் சென்றவர்களைத் திருத்தி, ஒழுங்குக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர பயப்படாதவர்கள்!

முடிவுரை

அ. தேவனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வேலையாள், எப்பொழுதும், பொய்ப்போதகம் மற்றும் கள்ளப்போதகர் மத்தியில் ஊழியம் செய்கிறான். இது அவனுடைய வேலையை முக்கியமாகக் கடினமாக்குகிறது. ஆகிலும், விசுவாசிகளுக்குப் போதிப்பது மற்றும் ஊழிய சம்பந்தமான கடமைகளை நிறைவேற்றுவது ஆகிய இவைகளுடன், இந்தப் பொய்ப்போதகங்களையும் கள்ளப்போதகர்களையும், அதே சமயம் எதிர்க்கவும் அவனால் கூடும். கள்ளப் போதகர்கள் மூலமாகப் பிசாசினால் சிறைப்பட்டவர்களில் சிலரை அவனால் இரட்சிக்கப்பட வழிநடத்த முடியும் என்ற நம்பிக்கையும் உண்டு.

தேவனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வேலையாள் (2 தீமோத்தேயு 2:14-26)

ஆ. ஆகவே, தேவனால் அங்கீகரிக்கப்பட்ட வேலையாள் கீழ்க்கண்ட தன்மைகளையுடைய ஒருவனாக இருக்கவேண்டும்.

1. சத்திய வார்த்தையை சரியானபடி பகுத்தறிந்து நிதானமாகப் பயன்படுத்த வேண்டும்.

2. பாலிய இச்சைகளுக்கு விலகியோட வேண்டும்.

தேவ பக்தியற்ற கொடிய கடைசி நாட்கள் (2 தீமோத்தேயு 3:1-9)

அ. ஒரு அதிர்ச்சியூட்டும் தேவபயமற்ற சமுதாயக் காட்சியுடன் இந்த அதிகாரம் ஆரம்பமாகிறது. இன்று நாம் வாழும் உலகத்தை இது தத்ரூபமாக விவரிப்பது தற்செயலாக நிகழ்ந்த ஒரு காரியமல்ல, ஏனெனில் இந்த சகாப்தம், (சபை மகிமையோடு மேகங்களுக்கு மேலாக எடுத்துக்கொள்ளப்படும் காலத்திற்கு முன்உள்ள காலம்) சீக்கிரத்தில் முடிவுக்கு வரப்போகிறது!

ஆ. இந்தச் சகாப்தத்தின் முடிவு நெருங்கி வர, வர காரியங்கள் இன்னும் மோசமாக, மோசமாக மாறிக்கொண்டே வரும். அது பொங்கி உள்ளூர் சபை மீது வடியும். ஆகவே, "கடைசி நாட்களில்" கீழ்க்கண்டவைகள் உள்ளடங்கும்:

1. உலகத்தில் பாவமும் துன்மார்க்கமும் முடிவில்லாமல் வளர்ந்துகொண்டேயிருக்கும்.

2. சன்மார்க்க நிலைகளும்; நடத்தையும் சடுதியாக நாசமடையும்.

3. விசுவாசத்திலிருந்து விழுந்துபோவது மிகுதியாக இருக்கும்.

4. கள்ள சபைகள், தீர்க்கதரிசிகள், மற்றும் ஆவிக்குரிய தலைவர்களின் எண்ணிக்கை வெளிப்படையாகக் காணத்தக்கவகையில் பெருகும்.

1. கடைசி நாட்களில் மக்கள் தேவபயமற்றவர்களாயிருப்பார்கள். (3:1-5)

அ. வசனம் 1. "மேலும் ---- அறிவாயாக" பவுல், தீமோத்தேயுவிடம் உண்மையில் இவ்வாறு கூறுகிறார்: "இவ்வாறு கூற எனக்கு விருப்பமில்லை. ஆனால், எச்சரிக்கையாயிரு, நீ விளங்கிக்கொண்டாயா என்பதை நிச்சயித்துக்கொள். நான், உன்னிடம் கூறப்போகும் செய்திகளை மறந்துவிடாதே!

ஆ. வசனம் 1. "---- கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வரும் ----" விசுவாசிகளுக்குக் கடைசி நாட்கள் என்பது, கிறிஸ்து முதல்முறை உலகத்திற்கு வந்ததற்கும், சபையை மகிமையோடே மேகங்களுக்கு மேலாக எடுத்துக்கொள்ளப் போவதற்கும் இடைப்பட்ட காலத்தைக் குறிக்கும். (1 தெசலோனிக்கேயர் 4:13-18; அப்போஸ்தலர் 2:17; 1 தீத்து 4:1; எபிரெயர் 1:1; 1 யோவான் 2:18; யூதா 17-18)

இ. "கொடிய காலங்கள்" என்றால், கடினமான, அபாயகரமான நேரங்கள், சகித்த மிக கஷ்டமான, மூர்க்கத்துடன் இருக்கும் துன்மார்க்கமான, துன்பநேரங்கள். "அநேகருடைய அன்பு (விசுவாசிகளின்) தணிந்துபோகும்" (மத்தேயு 24:12) என்ற அளவிற்கு துன்மார்க்கம் அவ்வளவு அதிகமாக இருக்கும், என்று கிறிஸ்து நமக்குக் கூறுகிறார்.

ஈ. வசனம் 2-4. (கடைசி நாட்களில்) "மனுஷர்கள் ---- இருப்பார்கள்" "கொடிய காலங்கள் என்றால் என்ன பொருள்படும் என்று பவுல் இப்பொழுது கூறுகிறார். மக்கள் (அவிசுவாசிகளும் விசுவாசத்திலிருந்து விழுந்துபோனவர்களும்) கீழ்க்கண்டவாறு இருப்பார்கள்::

1. தற்பிரியராயும், பணப்பிரியராயும் - இவைகள் குறிப்பிட்ட நோக்கத்துடன் முதலாவதாகக் கூறப்பட்டுள்ளது. இக்காரியங்கள் ஒரு நபரின் நோக்கமாகவும், இலக்காகவும் இருக்குமானால், அவன் தனக்குப் பிரியமானவைகள் என்று கருதும் காரியங்கள் மற்றும் அவனுடைய வாழ்க்கையில் முதன்மையாக அவன் வைக்கும் காரியங்கள் ஆகிய இவைகளில், மற்ற எல்லா வகையான சன்மார்க்க சீர்கேடுகளும் இந்த அட்டவணையில் தொடரும்

தேவ பக்தியற்ற கொடிய கடைசி நாட்கள் (2 தீமோத்தேயு 3:1-9)

சுயநலமும், பண ஆசை மற்றும் அதனால் கிடைக்கும் லாபமும், இன்றைய உலகத்தின், தேவபயமற்ற வாழ்க்கைக்கு வேரும் ஊற்றும் காரணமுமாக இருக்கிறது. (1 தீமோத்தேயு 6:10)

2. வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும் - வீம்புக்காரர், அகந்தையுள்ளவர்கள், தூஷிக்கிறவர்கள் ஆகிய இவர்களுக்கு இடையே தொடர்பு உள்ளது. பெருமையும், வீம்புக்காரருமாயிருப்பவர்கள் பெரும்பாலும் எப்போதும் அதிகாரம் செய்பவர்களாகவும், (கர்வம் நிறைந்த நடை, அங்கும் இங்கும் அலைகிறவர்கள்) மனமேட்டிமையுடன் அகந்தை மிகுந்த தோற்றம், நடத்தை மற்றும் தொடர்புகளையுடையவர்களாகவும் இருப்பார்கள்.

3. தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும் நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும்,சுபாவ அன்பில்லாதவர்களாயும்(குடும்ப அங்கத்தினர்களிடையேயுள்ளபாசம்) இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும் (பொய்யாய்க்குற்றம் சாட்டுகிறவர்களாயும் இச்சையடக்க மில்லாதவர்களாயும் சன்மார்க்கமாக பலவீனர், எதிர்த்து நிற்கிறவர்களாயும் கொடுமை யுள்ளவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர் களாயும் - இவையாவும் எதிர்க்கும் தன்மை நிறைந்த, சன்மார்க்கத் தாறுமாறான நடவடிக்கைகள்.

கிறிஸ்தவர்களால் உயர்வாக மதிக்கப்படும் நடத்தைப் பண்புகளையும், அவைகளை ஆதரித்துத் தாங்குபவர்களையும், அவைகளுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்று உரிமையோடு கேட்டுக்கொள்பவர்களையும், வெளிப்படையாக மூர்க்கமாக எதிர்ப்பார்கள்.

4. நல்லோரைப் பகைக்கிறவர்களாயும் - இவ்வுலகத்திலுள்ள நன்மையானவைகளையும், அவற்றோடுசம்பந்தப்பட்டவர்களையும்வெறுப்பவர்கள்.

5. தேவப் பிரியராயிராமல் சுகபோகப் பிரியராகவும் - தேவனுக்கு ஆராதனை செய்வதற்குப் பதிலாக சுகபோக இன்பங்களையும் சுயத்தையும் முதலாவதாக வைத்து வழிபடுவது, பொருளாதாரத்தில் நம்பிக்கைவைப்பதும், சுயநலத்துடன் இருப்பதும், தேவனிடத்தில் பயபக்தியுடன் இருப்பதற்கும், அவருக்கு மரியாதை செலுத்துவதற்கும் நேர் எதிரானவைகள். இப்படிப்பட்ட மனிதன் தேவபயமற்ற ஒரு நபராக முடிவில் கண்டிப்பாக மாறிவிடுவான். (மாற்கு 7:21-23; ரோமர் 1:29-31; 1 கொரிந்தியர் 6:9-10; கலாத்தியர் 5:19-21; எபேசியர் 5:5; வெளிப்படுத்தின விசேஷம் 22:15)

உ. வசனம் 5. "தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதன் பலனை மறுதலி ப்பார்கள்" கிறிஸ்தவர்கள் என்று உரிமையுடன் கூறிக்கொண்டு, ஆனால் அவ்வாறு இல்லாதவர்கள், கடைசி நாட்களில் உள்ளூர் சபைகளில் ஏராளமாக இருப்பார்கள். ஆனால், அவர்களை இலகுவாக இனங்கண்டறிய முடியும் ஏனெனில், அவர்கள் கடல்கரைகளில் காணப்படும் வெறுமையானகடல்சிப்பிகளைப்போல இருப்பார்கள்.

அவர்கள்:

1. தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்திருப்பார்கள் - அவர்கள் தேவபக்தியுள்ளவர்கள் போல தோற்றத்தில் காணப்படுவார்கள் ஆனால் இது ஒரு மாறுவேடம், ஒரு முகமூடி, பொய்யான முன் தோற்றம், பாவனை செய்வது; அவர்களுடைய உண்மையான சன்மார்க்க நடத்தைக்கு ஒரு திரைச்சீலை, என்று இது பொருள்படும்.

தேவ பக்தியற்ற கொடிய கடைசி நாட்கள் (2 தீமோத்தேயு 3:1-9)

2.ஆனால்அதன்பலனை மறுதலிப்பார்கள் - மறுபடியும் பிறப்பதற்கான சுவிசேஷத்தின் வல்லமை மற்றும் பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய அறிவு அவர்களுக்கு இல்லை. பழைய மனிதன் மரித்து, "புதிய" மனிதன் பிறப்பது சம்பந்தமான "புதிய" சன்மார்க்க நடத்தை என்றால் என்ன என்பதை அவர்கள் அறியமாட்டார்கள். (யோவான் 3:3-8; 2 கொரிந்தியர் 5:17; கலாத்தியர் 6:15) "பலன்" என்றால், அற்புதமான வல்லமை, திறமை, அதிகாரம் மற்றும் சக்தி; தேவனுடைய அற்புதமான அல்லது வல்லமையான அதிசய கிரியை. ஆகவே, நாம் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெறும்போது பெற்றுக்கொண்ட "வல்லமை"யோடும் இது தொடர்புடையது (அப்போஸ்தலர் 1:8) இந்தக் கள்ளப்போதகர்களும், தீர்க்கதரிசிகளும், வஞ்சகர்களுமாகிய இவர்கள், உள்ளூர் சபைகளில் எல்லாராலும் அறியப்பட்டவர்களாக இருக்கவும், முதன்மையான பதவியில் இருக்கவும், முயற்சிசெய்கிறார்கள். ஒருவன் பாவக்கிரியைகள் செய்தபோதிலும் இரட்சிப்பையும், தேவனுடைய இராஜ்ஜியத்தையும் சுதந்தரித்துக்கொள்ளமுடியும் என்றுபோதிக்கிறார்கள்.(வெளிப்படுத்தின விசேஷம் 2:20)

ஊ. வசனம் 5. "இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு." நாம் அவர்களைவிட்டு விலகவேண்டும்; அவர்களிடமிருந்து திரும்பிச் சென்றுவிடவேண்டும், அவர்கள் இருக்கும் இடத்தின் வழியாகச் செல்லாமல் சுற்றுவழியில் செல்லவேண்டும். கெஞ்சிக் கேட்டுக்கொண்டாவது அவர்களுடன் உள்ள சம்பந்தத்தை விலக்கிக்கொள்ளவேண்டும்; அவர்களைத் தவிர்த்து விடுவதற்கான காரணங்களைக் காட்டவேண்டும்;

என்று இது பொருள்படும். சபையிலுள்ளவர்களில் கீழ்க்கண்டகாரியங்களோடு தொடர்புடையவர்களுக்கும் இது பொருந்தும்.

1. தேவனற்ற புராணக்கதைகள் மற்றும் கிழவிகளின் பேச்சுகளாகிய கட்டுக்கதைகள்.

2. முட்டாள்தனமான, மதியற்ற தர்க்கங்கள்.

3. நியாயப்பிரமாணத்தைப்பற்றிய, முட்டாள்தனமான தாறுமாறான கருத்துக்கள், மற்றும் வம்சவரலாறுகள் பற்றிய செய்திகள் ஆகிய இவைகள் நிமித்தமாக சண்டைகள். (1 தீமோத்தேயு 4:7; 2 தீமோத்தேயு 2:23; தீத்து 3:9-11)

2. கடைசி நாட்களில் தேவனற்ற மக்கள், உள்ளூர் சபைகளிலுள்ள பலவீனமான மனப்பான்குள்ள நபர்களை கவிழ்த்துப்போட முயற்சிப்பார்கள். (3:6-7)

அ. வசனம் 7. "எப்போதும் கற்றாலும், ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண்பிள்ளைகளுடைய வீடுகளில் இப்படிப்பட்டவர்கள் நுழைந்து", "நுழைந்து" என்றால், அவர்கள் படிப்படியாக, பக்கவழியாக, தந்திரமாக (சுழற்றி மற்றும் திருப்பி, மற்றும் ஊர்ந்து, தவழ்ந்து உள்ளே செல்வதற்கு மிகச் சிறிய ஒரு துவாரத்தின் வழியாகச் செல்வதுபோல) மிக பெலவீனமான நபர்கள் இருக்கும் இடங்களுக்குள் சென்று, அவர்களிடம் தாங்களே தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு, முடிவில் அவர்களுடைய வாழ்க்கையில் மிகுந்த செல்வாக்கைப் பெற்றவர்களாகி விடுகிறார்கள்.

ஆ. வஞ்சகர்கள் மற்றும் கள்ளத்தீர்க்கதரிசிகளும், பொய்ப்போதகர்களும் ஆகிய இவர்களுடைய நோக்கங்கள் எல்லாம் எப்போதும் அசுத்தமானதும், தன்னயமானதுமாக இருக்கிறது.

தேவ பக்தியற்ற கொடிய கடைசி நாட்கள் (2 தீமோத்தேயு 3:1-9)

ஆவிக்குரிய வரங்களை நடப்பித்துக்காட்டுவதின் மூலமாகவும், எல்லா சூழ்நிலைகளிலும் உடனடியாக ஆலோசனை கூறுவதற்கு எப்போதும் ஆயத்தமாயிருப்பதின் மூலமாகவும், தங்களை ஆவியில் மிக உயர்ந்தவர்களாக இருப்பதுபோன்ற தோற்றத்தைக் காட்டி, அவர்களுடைய வஞ்சக முறைகளை பெரும்பாலும் பயன்படுத்துகிறார்கள்! அவர்கள் தங்களைப் பின்பற்றுகிறவர்களை ஆதாயம் செய்ய முயற்சி செய்து உள்ளூர்சபையில் ஆவிக்குரிய அதிகாரத்தையும், தலைமைப் பதவியையும் பெற்றுக்கொள்வதில் தந்திரமாக வெற்றியடைகிறார்கள்.

இ. "அவர்களை வசப்படுத்திக் கொள்ளுகிறார்கள்" என்றால், வஞ்சித்து யுத்தக் கைதிகளைப்போல சிறைப்படுத்திக் கொள்ளுகிறார்கள். "பலவீனமான மனப்பாங்கு" உள்ளவர்கள், அவர்களுடைய வழிகளிலெல்லாம் மதிகேடாய் நடந்துகொள்ளுவார்கள். இக்காலத்தில், நாம் அவர்களை புத்தியில்லாதவர்கள் என்று கூறுகிறோம்.

ஈ. வசனம் 6-7. "பாவங்களால் நிறைந்து, பற்பல இச்சைகளால் இழுப்புண்டு ---" இந்த தேவனற்ற மக்களால் இலக்காக வைக்கப்பட்டவர்கள், நம் மத்தியில் வருகிறார்கள். அவர்கள் மேலும் கீழ்க்கண்டவாறு நமக்கு விவரிக்கப்படுகிறார்கள். அவர்கள்:

1. பாவங்களால் நிறைந்திருப்பார்கள் - பாவத்தில் மூழ்கியிருப்பார்கள்; அவைகளை சுமக்க கூடாதபடிக்கும், பாரம்தாங்காமல் சரிந்து விழும் அளவிற்கு, அவைகள் ஒன்றின் மீது ஒன்றாக வைக்கப்பட்டிருக்கிறது.

2. பற்பல இச்சைகளால் இழுப்புண்டு பாவசுபாவத்தின் பொல்லாத ஆசைகளால், அவர்கள் இலகுவாகப் பாவத்தில் விழுந்துவிடுவார்கள் என்று பொருள்படும்.

3. "எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்துஉணராதவர்களாயிருக்கிற---" அவர்கள் பக்திபுள்ளவர்களாகவும், ஆவிக்குரிய ஞானம்பெற்ற நபர்களாகவும் இருக்க விரும்புகிறார்கள். ஆனால், அவர்களுக்குச் சொல்லப்படும் செய்திகளை அல்லது அவைகள் எதிலிருந்து தோன்றினவை என்பதைப்பற்றி கேள்வி எதுவும் கேட்காமல், கேட்கிறயாவற்றையும், அது எதுவாக இருந்தாலும் அவற்றை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இக்காரணத்தினாலே, கிறிஸ்துவின் இரட்சிப்பின் அறிவை அவர்களால் ஒருபோதும் முழுவதுமாகக் கிரகித்துக்கொள்ளக் கூடாதவர்களாயிருக்கிறார்கள். ஆகவே, உள்ளூர் சபையிலுள்ள மற்ற ஒவ்வொருவரும் அதை அநேகமாக அறிந்திருப்பார்கள்!

உ. வஞ்சகத்திற்கு இரையாக்கப்பட்ட இவர்கள், நிலையற்றவர்களும், குற்ற உணர்வினால் மேற்கொள்ளப்பட்டவர்களும், பாலியல்இச்சையினால்இடைவிடாமல்அலைக்களிக்கப்பட்டு தாறுமாறாகக்கிழிக்கப்பட்டவர்களுமாயிருக்கிறார்கள். அவர்களுடைய பலவீனமான சன்மார்க்க நிலையின் காரணமாக, நம்முடைய உள்ளூர் சபையின் மூலமாக வரும் மற்ற வஞ்சகர்களுக்கும், பொய்ப் போதகர்களுக்கும், அநேக நேரங்கள் இரையாக்கப்படுகிறார்கள்!

3. கடைசி நாட்களில், தேவனற்றவர்கள் சத்தியத்தை எதிர்ப்பார்கள். (3:8-9)

அ. வசனம் 8. "யந்நேயும், யம்பிரேயும் மோசேக்கு எதிர்த்து நின்றதுபோல ---" இன்றுள்ள சபைகளிலுள்ள தேவனற்ற வஞ்சகர்கள், யந்நேயும், யம்பிரேயும் ஆகியவர்களின் மாதிரியாக இருக்கிறார்கள். பழைய ஏற்பாட்டு வேதவசனங்களில் இந்த இரண்டு பேர்களும்விசேஷமாகக்குறிப்பிடப்படவில்லை.

தேவ பக்தியற்ற
கொடிய
கடைசி நாட்கள்
(2 தீமோத்தேயு 3:1-9)

ஆகிலும், யூத பாரம்பரிய வரலாற்றுகளின் குறிப்புகளின்படி, இவர்கள் பார்வோனுக்கு முன்பாக நின்று மோசேயை எதிர்க்க மாய தந்திரங்களை பயன்படுத்தியவர்கள். (யாத்திராகமம் 7:11-12)

ஆ. வசனம் 8. "இவர்களும் சத்தியத்துக்கு எதிர்த்து நிற்கிறார்கள்." "சத்தியத்துக்கு எதிர்த்து நிற்கிறார்கள்" என்றால் பரிசுத்த ஆவியானவர், ஒருவன் ஆவியில் மறுபடியும் பிறக்கும்படி, செய்கிறார் என்றும், அவர் கடந்த காலத்தில்

இருந்த பழைய பாவ மனிதனுக்கு நேர் எதிரான புதிய சன்மார்க்க நடத்தையுள்ளவனாக்குகிறார் என்றும் கூறும், சுவிசேஷ செய்தியின் சத்தியத்திற்கு எதிராக நின்று கிரியை செய்கிறான். அதாவது தேவனுடைய வல்லமையான அதிசய கிரியைக்கு எதிராக நிற்கிறான். (ரோமர் 1:16-17)

இ. வசனம் 8. "---- இவர்கள் துர்ப்புத்தியுள்ள மனுஷர்கள் விசுவாச விஷயத்தில் பரீட்சைக்கு நில்லாதவர்கள்----" நம்முடைய சபைகளுக்கு வரும் தேவனற்ற நபர்கள், உதவியற்ற மனிதர்களை இரையாக்கிக்கொண்டு, அவர்கள் ஒருபோதும் அனுபவித்திராத சுவிசேஷ சத்தியத்திற்கு எதிர்த்து நிற்பது மட்டுமல்லாமல், அவர்களை இரட்சிக்கும் கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்திலிருந்தும் விழுந்துபோகிறார்கள்.

ஈ. "பரீட்சைக்கு நில்லாதவர்கள்" எனவே சன்மார்க்க விஷயங்களில் தள்ளிவிடப் பட்டவர்கள்; புறக்கணிக்கப்பட்டவர்கள்; (ஒரு போலியான நாணயம் செல்வாக்கைப் பெற்றுக்கொள்ள முடியாது) மற்றும் கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் அடிப்படையில் பயனற்றவர்களாக அறிவிக்கப்படுவார்கள். கிறிஸ்துவின் ஆவியானவர் அவர்களுக்குள் வாசம்பண்ணுகிறார் என்பதை வெளிப்படுத்த உதவும் பரீட்சையில் நிற்கக் கூடாதவர்களாயிருப்பார்கள். உண்மையான விசுவாசிகள் மத்தியில் ஏற்றுக்கொள்ளப் படாதவர்களாக நிற்பார்கள்.

உ. வசனம் 9. "ஆனாலும் இவர்கள் அதிகமாய்ப் பலப்படுவதில்லை. அவ்விருவருடைய மதிகேடு எல்லாருக்கும் வெளிப்பட்டதுபோல, இவர்களுடைய மதிகேடும் வெளிப்படும்." கிறிஸ்து அவர்களுடைய பொறுப்பில்வைத்த மக்களை உண்மையாக நேசிக்கிற அனுபவத்தில் முதிர்ந்த ஒரு ஆவிக்குரிய தலைவர் இருக்கும் இந்த சபை அல்லது வேறு எந்த சபையாக இருந்தாலும், இவர்கள் அங்கு உள்ளே அதிக தூரம் செல்ல முடியாது, என்ற உண்மையை நான் உங்களுக்குக் கூறுகிறேன்! இவ்வகையான நபர்கள் முன்வாசல் வழியாக உட்பிரவேசித்து, பின் வாயில் வழியாக வெளியேறுகிறார்கள். இது ஒரு "நல்ல முறையான தள்ளிவிடுதல்"!

ஊ. மாயமும் தந்திரமும், கண்டறியப்பட்டு வெளிக்குக் கொண்டு வரப்படுவதற்கு முன், முதிர்ச்சியடைந்த விசுவாசிகள் மத்தியில் தொடர்ந்து அதிக நாட்கள் இருக்க முடியாது. இது ஒரு முறை வெளிப்படுத்தப்படுமானால்; உள்ளூர் சபையில் ஆவிக்குரிய தலைவர்களால் நடவடிக்கை எடுக்கப்படும்!(எடுக்கப்படவேண்டும்) அப்போஸ்தலர் நடபடிகள் 20:29-31; வெளிப்படுத்தின விசேஷம் 2:2; 1 யோவான் 4:1-3; 2 கொரிந்தியர் 10:6)

முடிவுரை

அ. இந்த கடைசி நாட்களில், தேவபயமற்ற காரியங்கள், மனிதர்கள் மத்தியில் தீவிரமாக செயல்படுகிறது. இது நிரம்பி வழிந்து உள்ளூர் சபைகளுக்குள்ளும் பாய்கிறது. இது ஆதிசபையிலும் இன்றுள்ள சபையிலும் உண்மையாக இருக்கிறது.

தேவ பக்தியற்ற கொடிய கடைசி நாட்கள் (2 தீமோத்தேயு 3:1-9)

ஆ. சபையில் தேவபயமற்றிருப்பது, எனக்கு அதிக சங்கடத்தை மிகுதியாகக் கொடுக்கிற ஒரு காரியமாக இல்லை. ஆனால், உதவியற்ற மனிதர்கள் இயேசு கிறிஸ்துவைப்பற்றிய இரட்சிப்பின் அறிவை முழுமையாக கிரகிப்பதற்குக், கடினமானதாகக் காணப்படும்படியாக, இவர்கள் அவர்களைத் தங்களுக்கு இரையாக்கிக்கொள்ளுகின்றனர்!

இ. ஆனால் அடுத்தாற்போல் நடக்கப்போகும் காரியம் நிச்சயம், அதாவது, அவர்களுடைய போதனை மற்றும் அவர்கள் வாழும் வாழ்க்கையிலிருந்து, அவர்களுடைய பாவம் மற்றும் வஞ்சகங்கள் வெளிப்படுத்தப்படும். ஒரு முறை அவைகள் வெளிப்படுத்தப்பட்டால், அவர்கள் புறக்கணிக்கப்பட்டு, சபையிலிருந்து தூக்கியெறியப்படுவார்கள்.

பரிசுத்த
வேதவசனங்கள்
2 தீமோத்தேயு 3.15-17

முன்னுரை

அ. அவருடைய இரண்டாம் நிருபத்தில், கர்த்தருக்கு உண்மையுடன் நிலைத்திருக்கவேண்டுமென்று, பவுல் தீமோத்தேயுவை உற்சாகப்படுத்துகிறார். வேதவசனங்களிலும் பயிற்றுவிக்கப்பட வேண்டுமென்றும் அவர் ஞாபகப்படுத்துகிறார். மற்ற யூத சிறுவர்கள் போல ஐந்து வயதிலிருந்து பழைய ஏற்பாட்டு வேதவசனங்கள் அவனுக்குக் கற்பிக்கப்பட்டுள்ளது. இவற்றை ஞாபகத்தில் வைத்துக் காத்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறான். ஐந்தாவது பிறந்த நாளுக்கு முன்பதாகவே, அவனுடைய தாயார் ஐனிக்கேயாளும், பாட்டி லோவிசாளும் வீட்டில் அவனுக்குப் போதித்து வந்தனர் என்பது வெளிப்படையாக அறியப்பட்டகாரியம் (2 தீமோத்தேயு 1:5)

ஆ. கிறிஸ்து சம்பந்தப்பட்ட போதனைகளையும், கிறிஸ்துவில்வைக்கும் விசுவாசத்தால் கிடைக்கும் இரட்சிப்பின் சுவிசேஷ செய்தியையும், பவுல் தீமோத்தேயுவுக்கு கற்றுத்தந்திருந்தார் என்பதும் சாத்தியமாகும்.

இ. வேதவசனங்களைப்பற்றி மேலும் அதிகமாகக் கூறவும், சபையில் அவைகளினால் கிடைக்கும் நன்மைகளை எடுத்துக் கூறவும் தீமோத்தேயுவுக்குக் கொடுத்த அறிவுரைகளுடன், பவுல் இந்தக் குறிப்புகளையும் பயன்படுத்துகிறார்.

1. வேதவசனங்கள், தேவ ஆவியினால் அருளப்பட்டது.

2. நம்மை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவர்களாகும்படி செய்கிறது.

3. அவைகள் உபதேசத்திற்கும் கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியை படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.

1. வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது (3:16)

அ. "வேதவாக்கியங்களெல்லாம்" முதன் முதலாக இங்கே, பழைய ஏற்பாட்டு வேதவசனங்களே குறிப்பிடப்படுகிறது. பழைய ஏற்பாட்டு வேதவசனங்களின் விதிப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட, 39 பழைய ஏற்பாட்டு புத்தகங்கள், (தேவ ஆவியினால் அருளப்பட்டதென்றும், சட்டப்படி தகுதியானதென்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது) எஸ்றாவின் காலத்தில் "மாபெரும் ஜெப ஆலயத்தில்" கிறிஸ்துவுக்கு முன் ஐந்தாம் நூற்றாண்டில் முற்றுப்பெற்றிருக்கச் சாத்தியமுண்டு. இவைகள், இன்று நாம் அறிந்திருப்பதுபோல், மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது; நியாயப்பிரமாணமும் சரித்திரமும், கவிதையும் ஞானவாக்கியங்களும், மற்றும் தீர்க்கதரிசனம்.

ஆ. ஆகிலும், சில புதிய ஏற்பாட்டு வேதவசனங்களையும் பவுல் அநேகமாக அவ்வாறே நினைத்திருக்கக் கூடும். ஏனெனில் அவைகளில் அநேகம் ஏற்கனவே எழுதப்பட்டு, சபைகளுக்கிடையே சுற்றறிக்கையாக அனுப்பப்பட்டு வந்தது. அவருடைய மூன்று நிருபங்களில், அவரால் எழுதப்பட்டவைகள், "தேவனுடைய வார்த்தையாக" இருக்கிறது என்று உண்மையாகக் கூறுகிறார்.

பரிசுத்த
வேதவசனங்கள்
2 தீமோத்தேயு 3.15-17

(1 கொரிந்தியர் 14:37; கலாத்தியர் 1:11-12; 1 தெசலோனிக்கேயர் 2:13) இதை, அவருடைய இரண்டாம் நிருபத்தில் பேதுரு உறுதிப்படுத்துகிறார். (2 பேதுரு 3:15-16)

இ. தீமோத்தேயுவுக்கு எழுதின முதல் நிருபத்தில், கிறிஸ்து கூறியவைகளில் ஒன்றையும், பவுல் குறிப்பிடுகிறார். இந்த கிறிஸ்துவினுடைய வார்த்தைகள் ஏடுகளில் எழுதப்பட்டு, சுற்றறிக்கையாக ஏற்கனவே இக்காலத்தில், அனுப்பப்பட்டது. (5:18; லூக்கா 10:7)

ஈ. "தேவனால் அருளப்பட்டது." வேதவசனங்களை எழுதிய ஆசிரியர்கள் எழுதவேண்டிய பொருளை தேர்ந்தெடுப்பதற்கும், எந்த வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டுமென்றும், பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டும், வழிநடத்தப்பட்டும் வந்தனர் என்று, இது பொருள்படும். "வேதத்திலுள்ள எந்த தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்." (2 பேதுரு 1:20-21)

உ. பழைய ஏற்பாட்டை எழுதிய ஆசிரியர்கள், அவர்கள் எழுதிய வார்த்தைகள், தேவனால் அவர்களுக்கு நேரடியாகக் கொடுக்கப்பட்டதென்று, 3,800 முறைகளுக்கு அதிகமான இடங்களில், பகிரங்கமாக எடுத்துக் கூறுகின்றனர். "இவ்வாறு கர்த்தர் உரைக்கிறார்," "கர்த்தருடைய வார்த்தை எனக்கு வந்தது" மற்றும், "கர்த்தர் கூறுகிறார்" போன்ற சொல்தொடர்கள் பழைய ஏற்பாட்டு முழுவதிலும் சாதாரணமாகக் காணப்படுகிறது.

ஊ. இயேசுவும், அவருடைய வார்த்தைகள் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டவைகள் என்று அறிவிக்கிறார். "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை." என்று அவர் கூறும்போது, அவைகள் நித்தியமாக உண்மையானவைகளும், சட்டப்படி செல்லக்கூடியவைகளுமாக நிலைத்திருக்கும் என்று அறியப்படுகிறது. (மத்தேயு 24:35) பழைய ஏற்பாட்டு வேதவசனங்களைக் குறித்தும் அவர் (இயேசு) கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

1. சரித்திரத்தில் இந்த சகாப்தம் முழுவதிலும் நிலைத்திருக்கும்.

2. அழிக்கமுடியாது. (மத்தேயு 5:17-18; யோவான் 10:35)

எ. புதிய ஏற்பாட்டு வேதவசனங்கள், தேவனால் ஏவப்பட்டவைகள் என்பதை, இயேசுவானவர் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிக் கூறுவதிலிருந்தும் நாம் அறியலாம். "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே, எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் --- தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்." (யோவான் 14:26; 16:13)

ஏ. பரிசுத்த ஆவியானவர் புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களுக்கு, இயேசுவின் போதனைகளையும் வார்த்தைகளையும் கற்பித்து, ஞாபகப்படுத்துகிறார். (1 கொரிந்தியர் 2:13; 14:37; கலாத்தியர் 1:12; 1 பேதுரு 1:12). அவர்கள் எதிர்காலத்தைக் குறித்தும் அவ்வாறே எழுதிவைக்கும்படியாக, அவர், அவற்றையும் அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். (வெளிப்படுத்தின விசேஷம் 1:1, 10-11)

பரிசுத்த வேதவசனங்கள் 2 தீமோத்தேயு 3.15-17

2. பரிசுத்த வேதவசனங்கள் நம்மை இரட்சிப்புக்கு ஏற்ற ஞானமுள்ளவர்களாக்கும் வல்லமையுடையது. (3:15)

அ. "அவைகள் உன்னை இரட்சிப்புக்கேற்ற, ஞானமுள்ளவனாக்கும்." "ஞானமுள்ளவனாக்கும்" என்றால் வேதவசனங்கள் ஞானத்தைத் தரும் என்று பொருள்படும். எப்படி இரட்சிக்கப்படவேண்டும் என்ற தெளிவான மனதை அவைகள் கொடுக்கும். "இரட்சிப்பு" என்றால், மீட்கப்படுவது, பாதுகாப்பான இடத்தைக் கொடுப்பது என்று பொருள்படும். பழைய ஏற்பாட்டு வேதவசனங்கள், வரப்போகும் மேசியாவைப்பற்றி அறியும் ஞானமுள்ளவனாகும்படி செய்தது. அவர்மூலமாக மீட்பும், பாதுகாப்பும் பெற்றுக்கொள்ளக்கூடியதாயிற்று. (யோவான் 5:39)

ஆ. ஒருவன் இரட்சிக்கப்படும்போது (மீட்கப்பட்டுப் பாதுகாப்புடன் இருப்பது) உடனடியாக அநேகக் காரியங்கள் நடந்துவிடுகிறது:

1. செய்த குற்றங்களுக்காக மனம் வருந்துதல் - ஒரு மனிதன் இயேசுவைப்பற்றி அவனுடைய மனதை மாற்றிக்கொள்ளுகிறான். இயேசு தேவனுடைய குமாரன் என்றும் அவனுடைய பாவங்களுக்காகப் பிராயச்சித்தபலியாக, அவமானமான சிலுவையில் பாடுபட்டு மரித்தார் என்றும் அறிந்துகொள்ளுகிறான். அவன் தனிப்பட்டமுறையில், தேவனுக்கு விரோதமாகப் பாவம்செய்து குற்றமுள்ள மனச்சாட்சியுடையவனாயிருக்கிறான் என்றும் அத்துடன் அந்த பாவங்களுக்காகத் துக்கப்படுகிறான் என்றும் நாம் அறியலாம். கிறிஸ்துவின் மூலமாக மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் தேடவேண்டிய அவசியத்தையும் உணர்ந்தவனாயிருக்கிறான்.

2. விசுவாசம் - தேவனிடமிருந்து அவனைப் பிரிக்கும் பாவம் மற்றும் மரணத்திலிருந்து அவனை மீட்க கிறிஸ்து இயேசுவின்மீது நம்பிக்கை வைக்கத் துவங்குகிறான்.

3. மறுபிறப்பு - கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைப்பவனிடம், பரிசுத்த ஆவியானவர் வந்து, அவருடைய ஆவியினாலே புதிய பிறப்படையும்படியாகச் செய்கிறார். பரிசுத்த ஆவியானவர், பாவசுபாவத்தின் வல்லமையிலிருந்து அவனை விடுவித்து, பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணம் எதிர்பார்க்கும் நீதியை முழுவதும் சந்திக்கக்கூடிய வாழ்க்கை வாழ அவனுக்கு பலன் தருகிறார்.

4. நீதிமானாக்கப்படுதல் - பிதாவாகிய தேவனுடன் சரியான சம்பந்தத்தில் அவன் இருக்கிறான் என்று அறிவிக்கப்படுகிறது. அவன் தேவனுக்கு சிநேகிதனாகிறான். தேவனுடைய நியாயசபையில், இயேசுவில் விசுவாசம்வைக்கும் ஒருவன் அவருடைய பார்வையில் சட்டப்படி நீதிமானாகிறான்.

5. புத்திர சுவீகாரம் - எல்லா விசுவாசிகளும், தேவனுடைய குடும்பத்தில் சுவீகார புத்திரராகிறார்கள். அவர்கள் அவருடைய பிள்ளைகளாகிறார்கள். அவர்கள் மற்றொருவனுடைய குமாரர்களாக இருந்து, பிதாவாகிய தேவனால் அவருடைய குடும்பத்திற்குள் சுவீகாரபுத்திரராக அதே நிலையில், குடும்பத்திலே பிறந்த ஒரு குமாரனுக்குள்ள எல்லா உரிமைகளுடன், ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்.

பரிசுத்த வேதவசனங்கள்
2 தீமோத்தேயு 3.15-17

இ. "கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே" - பவுல் இவ்வாறு கூறுகிறார்: "கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல." (எபேசியர் 2:8-9) மேலும் இவ்வாறு கூறுகிறார்: "---- விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது." (ரோமர் 1:17; 3:21-22; கலாத்தியர் 2:15-16)

3. வேதவசனங்கள் உபதேசத்திற்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப்படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.

அ. வசனம் 17. "பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது." "பிரயோஜனம்" என்றால், மிகவும் பயனுள்ளதாக, நன்மையைத் தருகிறதாக, என்று பொருள்படும். இது எபேசுவிலுள்ள ஆவிக்குரிய தலைவனாக தீமோத்தேயுவிடம் இங்கு கூறப்படுகிறது.

ஆ. "உபதேசத்திற்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப்படிப்பிக்குதலுக்கும்" பழைய ஏற்பாட்டு மற்றும் புதிய ஏற்பாட்டு வேதவசனங்கள், ஒரு ஆவிக்குரிய தலைவனுக்கு கீழ்க்கண்ட காரியங்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கிறது:

1. உபதேசத்திற்கு - விசுவாசிகளுக்குப் போதிக்க, அவசியமான கருத்துப்பொருள் இவைகளில் அடங்கியுள்ளது.

2. கடிந்துகொள்ளுதல் - ஒரு பாவி பாவ உணர்வு அடைவதற்கும், பொய்யான கொள்கைகளை எதிர்த்து விரட்டுவதற்காக.

3. சீர்திருத்தலுக்கு - ஒரு விசுவாசியை நேர்மையான நிலைக்குத் திரும்ப கொண்டுவர, அல்லது பிதாவாகிய தேவனுடன் நேர்மையான தொடர்புக்குள் கொண்டுவர.

4. நீதியைப்படிப்பிக்குதலுக்கு - விசுவாசிகள் அவர்கள் எவ்வாறு வாழவேண்டும் என்று அறிவுரை வழங்க.

இ. வசனம் 17. "நீதியை" என்றால் தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவது என்று இங்கு பொருள்படும். பரிசுத்தமுள்ளவர்களாகவும், கபடற்றவர்களாகவும், தேவனோடு சரியான தொடர்புடையவர்களாகவும் இருப்பது என்று இது பொருள்படும். பிதாவாகிய தேவனோடு சரியான தொடர்பை நிலை நாட்டவும், அவ்வாறாகவே அவர்கள் நிலைத்திருக்கிறார்களா என்பதைக் கவனித்துக் கொள்வதற்கும், வேத வசனங்கள் ஆவிக்குரிய தலைவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கிறது. விசுவாசிகள் எவ்வாறு கிறிஸ்தவர்களாக தங்கள் மத்தியிலும் மற்ற அஞ்ஞானிகள் மத்தியிலும் வாழவேண்டும் என்று போதிப்பதற்கும் அவைகள் பிரயோஜனமுள்ளவைகளாக இருக்கிறது

ஈ. வசனம் 16. "தேவனுடைய மனுஷன் ---- தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக" "தகுதியுள்ளவனாக", என்றால் முற்றிலும் செய்யக்கூடியவனாக, திறமையுடையவனாக, அவன் செய்வதில் தேர்ச்சிபெற்றவனாக இருக்கவேண்டும், என்று பொருள்படும்.

**பரிசுத்த
வேதவசனங்கள்
2 தீமோத்தேயு 3.15-17**

உ. வசனம் 16. "எந்த நற்கிரியையும் செய்ய", "எந்த நற்கிரியையும்" என்றால், வேத வசனங்கள் நமக்கு எவ்வாறு வாழும்படி கூறுகிறதோ அம்மாதிரியான வாழ்க்கை வாழவேண்டும் மற்றும் வேதவசனங்கள், என்ன செய்யவேண்டும் என்று நமக்குக் கற்பிக்கிறதோ அக்காரியங்களையே செய்ய வேண்டும், என்று பொருள்படும்." "தேவனுடைய மனுஷன்" கண்டிக்கப்பட்டு, சீர்திருத்தப்பட்டு, நீதியைப் படிப்பிக்கப்பட்ட பின்பு, கிறிஸ்தவனாக அவனிடமிருந்து அதிகாரப்பூர்வமாக எதிர்பார்க்கப்படும் எல்லா கோரிக்கைகளையும் சந்திக்க ஏதுவுள்ளவனாக இருக்கவேண்டும். விசுவாசியாக அவனிடம் சவாலாக விடப்படும் எந்த நற்கிரியையும் செய்வதற்குத் தேவையான ஆவிக்குரிய ஆயுதங்களோடு, அவன் ஆயத்தமுள்ளவனாக இருக்க வேண்டும்.

முடிவுரை

அ. பரிசுத்த வேதவசனங்கள் தேவனால் ஏவப்பட்டவைகள். ஆகவே போதகர், உபதேசியார் அல்லது சுவிசேஷகர், தீர்க்கதரிசி மற்றும் அப்போஸ்தலர் ஆகிய இவர்களுக்கு கீழ்க்கண்ட காரியங்களுக்கு மிக அத்தியாவசியமான பொருளாக இருக்கிறது.

1. மற்றவர்களை இரட்சிப்புக்கு ஏற்ற ஞானமுள்ளவர்களாக்குவதற்கு.

2. போதிக்கவும், கண்டிக்கவும், சீர்திருத்தவும், நீதியைப்படிப்பிப்பதற்கும்.

ஆ. ஆகிலும், அவைகள் ஒருதனிப்பட்ட விசுவாசிக்கும் அவ்வாறே மிக முக்கியமானதாக இருக்கிறது. அவர்கள் கேள்விப்படாமலும், வாசிக்காமலும், கற்றுக்கொள்ளாமலும், பரிசுத்த ஆவியானவரால் அவனுடைய நடைமுறை வாழ்க்கையில் அதை செயல்படுத்தாமலும் இருப்பானேயாகில் அவனுடைய விசுவாசம் மற்றும் தேவன் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றிய அறிவிலும், கிறிஸ்தவனாக அவனுடைய வாழ்க்கையிலும் அவன் முதிர்ச்சியடைய முடியாது. விசுவாசியாக, சவாலாக அவனிடம் எதிர்பார்க்கப்படும் நற்கிரியைகளைச் செய்வதற்கு அவசியமான ஆவிக்குரிய ஆயுதங்களை உடையவனாகவும் இருக்கமுடியாது

தீமோத்தேயுவுக்கு பவுலுடைய கடைசி அறிவுரைகள் (2 தீமோத்தேயு 4:1-8)

முன்னுரை

அ. கர்த்தருக்குள் அவருடைய ஆவிக்குரிய குமாரனான தீமோத்தேயுவுக்கு, பவுல் இப்பொழுது அவருடைய அறிவுரைகளின் முடிவுக்கு வருகிறார். (1:6-14; 2:1-9, 14-26; 3:10-17) தேவன் மற்றும் கிறிஸ்துவின் சன்னிதானத்தில், கொடுக்கப்பட்ட இந்த முடிவான அறிவுரைகள், ஒரு பயபக்தியான "கட்டளையோடு" ஆரம்பமாகிறது. (வசனம் 1)

1. அவருடைய வசனத்தைப் பிரசங்கிக்கும்படியாக, அவருடைய கடைசி அறிவுரைகளில், பவுல், தீமோத்தேயுவுக்குக் கூறுகிறார். (4:1-4)

அ. வசனம் 1. "நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும், மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும் ---" பவுல் தீமோத்தேயுவுக்குக் கொடுக்கப்போகிற "கட்டளை" தேவன் மற்றும் கிறிஸ்துவின் சமுகத்தில் (முகத்திற்கு முன்பாக, அவருடைய பார்வையில்) கொடுக்கப்பட்டது. (அவர், உயிரோடிருக்கிற மற்றும் மரித்த - இதில் எல்லா விசுவாசிகளும் உள்ளடங்குவார்கள் - எல்லா மனிதர்களையும் நியாயந்தீர்ப்பார் - அப்போஸ்தலர் 10:42; 17:31; யோவான் 5:22; 1 பேதுரு 4:5 மற்றும் 2 கொரிந்தியர் 5:10; ரோமர் 14:10-12; 1 கொரிந்தியர் 3:11-15; 4:5)

ஆ. வசனம் 1-2. "---- அவருடைய பிரசன்னமாகுதலையும், அவருடைய இராஜ்ஜியத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது": "கட்டளை" என்பது, உண்மையாக சாட்சியாயிருக்க வேண்டும் என்றும், பயபக்தியோடு சாட்சிகொடுக்கவேண்டும் என்பதைக் குறிக்கிறது. (1 தீமோத்தேயு 5:21; 2 தீமோத்தேயு 2:14) இந்தக் கட்டளை மூன்று பாகங்களையுடையதாக இருக்கிறது:

1. திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு - "பிரசங்கம்" என்றால் பொது அறிவிப்புகளை அறிவிக்கிறவர்கள்போல் பறைசாற்றவேண்டும், யாவரும் அறிய கூறவேண்டும். "திருவசனம்" என்பது, சுவிசேஷ சத்தியம் மற்றும் செய்தியாக இருக்கிறது. (1 தீமோத்தேயு 6:20; 2 தீமோத்தேயு 1:14)

2. "சமயம்" வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் பிரசங்கம் பண்ணு ----" கேட்பவர்களுக்கு வசதியாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டும் என்று இது பொருள்படும். தீமோத்தேயு தனக்கு வசதியாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், ஊழியத்தில் நிலைத்திருக்க வேண்டும் என்று இது பொருள்படும். "ஜாக்கிரதையாய் பிரசங்கம்பண்ணு" எப்பொழுதும் ஆயத்தத்தோடு இருக்கவேண்டும் எல்லா நேரங்களிலும் அருகில் இருக்கவேண்டும், கடமையைச் செய்வதில் நிலைத்திருக்கவேண்டும். "அதைக் காத்துக்கொள்ள வேண்டும்".

3. "கண்டனம் பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு - எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் - "கண்டனம் பண்ணி" என்றால், கண்டித்து, குற்றத்தை உணரும்படி செய்தல் அல்லது, தவறை எடுத்துக் கூறுதல் என்று பொருள்படும். "கடிந்து கொண்டு" என்றால், குற்றஞ்சாட்டுவது, சீர்திருத்தப்பட மறுப்பவர்களை நீக்கிவிடுவது, என்று பொருள்படும். "புத்திசொல்லு" என்றால், அவர்கள் ஆர்வத்தைத் தூண்டிவிடவும், அவர்களை ஆறுதல்படுத்தித் தேற்றவும் தக்கதாக, ஒருவரை நம் அருகில் வருமாறு அழைத்தல். இக்காரியங்கள் யாவும் பொறுமையோடும் (நீடிய சாந்தத்தோடு) கவனமாக வேத வசனங்களிலிருந்து எடுக்கப்பட்ட அறிவுரைகளோடும் (உபதேசத்தோடும்) இருக்க வேண்டும்.

தீமோத்தேயுவுக்கு பவுலுடைய கடைசி அறிவுரைகள் (2 தீமோத்தேயு 4:1-8)

இ. ஆகவே, சபையை மகிமையோடு மேகங்களுக்கு மேலாக எடுத்துக்கொள்ளக் கிறிஸ்து உடனடியாக வரப்போவதையும், உயிரோடிருப்பவர்களையும் மரித்தோரையும் - எல்லா பரிசுத்தவான்களும் இதில் அடங்குவார்கள், குறிப்பாகத் தீமோத்தேயுவையும் - நியாயந்தீர்த்து, எருசலேமிலிருந்து அவருடைய ஆளுகையையும் இராஜ்ஜியத்தையும் நிலைநாட்டுவார் என்பதையும், தீமோத்தேயுவுக்குப் பவுல் கொடுத்த பயபக்தியான “கட்டளை” அடிப்படையாகக் கொண்டுள்ளது.

ஈ. வசனம் 3. “ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல் ---- காலம்வரும்”. ஆகவே, தீமோத்தேயு என்ன காரியங்கள் செய்யப்போகிறானோ, அதை சீக்கிரமாகச் செய்தால் நலமாக இருக்கும்! இக்காரியம், இன்றுள்ள ஆவிக்குரிய தலைவர்களுக்கும் பொருந்தும்! ஏனெனில், ஆரோக்கியமான (சீர்கேடில்லாத, உண்மையான, பாதுகாப்பான, நல்ல நிலையில் உள்ள, முழுமையான) மதகோட்பாடுகளோடு (சுவிசேஷ சத்தியங்களின் - அறிவுரைகள், உபதேசங்கள் - 1 தீமோத்தேயு 4:1-2; 5:15) “மனதிசைந்து” ஆராதனைகளில் செலவிடவேண்டிய போதுமான நேரம், தங்கியிருப்பவர்கள் ஒரு சிலராகவே இருக்கும் காலம் வரும்.

உ. வசனம் 3. “---- செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு”

இந்த நபர்கள், ஆரோக்கியமான மதகோட்பாடுகளைப் போதிக்கும் இடங்களில் நிலைத்திருப்பதற்குப் பதிலாக, மற்ற சபைகளையும் ஊழியங்களையும் கட்டுவார்கள். மற்றும் கீழ்க்கண்ட காரியங்களையும் செய்வார்கள்.

1. தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற - “இச்சைகள்” என்றால், தடைசெய்யப்பட்ட ஒரு காரியத்தை அதிகம் ஆசைப்படுவது, பொல்லாத வாஞ்சைகள்.

2. போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு - மேலும் அதிகமான போதகர்களை அவர்கள் தேடுவார்கள். உபதேசிக்கிற வேறு அநேக போதகர்களை சேர்த்துக்கொள்ளுவார்கள்.

3. “செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற ---” “செவித்தினவுள்ளவர்கள்”, என்றால் கீறல் ஏற்பட்ட, சுரண்டியெடுக்கப்பட்ட, லேசான தூண்டுதலுக்கும் சந்தோஷப்படும், செவியை உடையவர்கள். வேத வசனங்களின் உண்மையான உபதேசங்களில், தடைசெய்யப்பட்டவைகளையும், அவர்களுடைய துன்மார்க்கமான இச்சைகளைத் திருப்தி செய்பவைகளையும் அங்கீகரித்துக்கொள்ளும் (அதற்கேற்ற வாதம் செய்யும்) ஏராளமான கள்ளப்போதகர்களை அவர்கள் கூட்டிச் சேர்ப்பார்கள், என்று இங்கே இது பொருள்படும்.

ஊ. வசனம் 4. “சத்தியத்துக்குச் செவியை விலக்கிக் கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகுங்காலம் வரும். “சத்தியத்துக்குச் செவியை விலக்கி” என்றால், சுவிசேஷ சத்தியங்களுக்கு விலகிச் செல்வது, எங்கு அது பிரசங்கிக்கப்படுகிறதோ, அவ்விடத்திலிருந்து (1 தீமோத்தேயு 1:6; 5:15) தங்களைத் தாங்களே பிரித்து விலகிச்செல்வது, என்று பொருள்படும். (1 தீமோத்தேயு 1:4; 4:7; 2 பேதுரு 1:16)

தீமோத்தேயுவுக்கு பவுலுடைய கடைசி அறிவுரைகள் (2 தீமோத்தேயு 4:1-8)

2. எல்லா சூழ்நிலைகளிலும் தீமோத்தேயு உறுதியாய் அவனுடைய ஊழியத்தில் நிலைத்திருக்கும்படி, பவுல், தீமோத்தேயுவுக்குக் கொடுத்த கடைசி அறிவுரைகளில் கூறுகிறார். (4:5)

அ. நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு ----" "மனத்தெளிவுள்ளவனாயிரு" என்றால், திராட்சரசம் குடிப்பதைத் தவிர்த்துத், தெளிந்த மனதோடு இருத்தல் என்று பொருள்படும். உன்னை நீயேகட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ளவேண்டும், என்றும் தீமோத்தேயுவுக்குக் கூறப்படுகிறது. "செவித்தினவுள்ளவர்கள்" புராணக்கதைகளுக்குச் (கட்டுக்கதைகள் மற்றும் பொய் வரலாறுகள்) சார்ந்துபோவதுபோல் நீ சாய்ந்துபோய் விடாதபடி எப்பொழுதும் தொடர்ந்து விழிப்புடன் உன்னைக்காத்துக்கொள்வது. "எல்லாவற்றிலும்" என்றால் சுவிசேஷசத்தியங்கள் (என்னிடமிருந்து நீ கேள்விப்பட்ட) மற்றும் உன்னுடைய ஊழியங்கள் தொடர்பான எல்லா காரியங்களிலும் என்று பொருள்படும்.

ஆ. தீமோத்தேயுவுக்கு இந்த வசனத்தில் சேர்க்கப்பட்டுள்ள மற்ற அறிவுரைகள்:

1. "தீங்கனுபவி - உபத்திரவங்களையும் கடினமான சூழ்நிலைகளையும் சகித்துக்கொள், சோதனைகளையும், தொல்லைகளையும் அனுபவி, என்று இது பொருள்படும். (1:8; 2:3; 3:12)

2. "சுவிசேஷகனுடைய வேலையைச் செய் - நற்செய்தியை யாவருக்கும் பரப்புவது, அப்போஸ்தலர் மற்றும் போதகருடைய வேலை. (எபேசியர் 4:11; அப்போஸ்தலர் 21:8) சுவிசேஷகன் நற்செய்தியை அறிவிக்கும் ஒருவனாக இருக்கிறான், சுவிசேஷ செய்தியை பிரசங்கிப்பவனாகவும் இருக்கிறான்.

3. "உன் ஊழியத்தை நிறைவேற்று" - நீ என்ன செய்யவேண்டுமென்று நியமிக்கப்பட்டிருக்கிறாயோ, அதை நிறைவேற்று; நீ செய்யவேண்டுமென்று அழைக்கப்பட்ட எல்லா வேலையையும் முற்றிலுமாகச் செய்து முடி என்று பொருள்படும். நீ கலப்பையின் மேல் உன் கையை வைத்துவிட்டாய், வயல் நிலம் முழுவதும் நீ உழுது முடிக்கும்வரை, திரும்பிப் பார்க்காதே. (உன்னுடைய ஊழியம் நிறைவடையும்வரை)

முடிவுரை

அ. வசனம் 6-8. இங்கு, பவுலுடைய ஊழியம் முழுவதும் ஒரு குறுகிய பத்தியில் சுருக்கமாக இருக்கிறது. பவுலைப்போல, அவனுடைய நீண்டகால, உண்மையான ஊழியகாலத்தில், அப்போஸ்தலனாக (தூர இட சுவிசேஷ ஊழியன்) அநேக சோதனைகளையும் தொல்லைகளையும் சகித்துவந்த தீமோத்தேயுவை உற்சாகப்படுத்தும்படியாகப், பவுல் இதைக் குறிப்பிடுகிறார்.

1. நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன். - பரிசுத்த ஸ்தலத்தில் கர்த்தருக்கு முன்பாக ஊற்றப்படும் பானபலியின் காட்சியாக இது இருக்கிறது. (எண்ணாகமம் 28:7; 15:5,7,10; மற்றும் பிலிப்பியர் 2:17) ரோமாபுரியில் அவருடைய இரண்டாவது சிறையிருப்பு, இரத்த சாட்சி மரணத்தில் முடிவடையும் என்பதை பவுல் அறிந்திருந்தார்.

தீமோத்தேயுவுக்கு பவுலுடைய கடைசி அறிவுரைகள் (2 தீமோத்தேயு 4:1-8)

"நான் பிரியும் காலம் வந்தது," என்று அவர் தீமோத்தேயுவிடம் கூறுகிறார். (போய், கர்த்தரோடு இருக்கப்போகிறார் - பிலிப்பியர் 1:23) "பிரியும் காலம்" என்பது, உறுதியாகக் கட்டப்பட்ட கப்பல் பிரயாணத்திற்காகக் கட்டவிழ்க்கப்பட்டதை வருணனை செய்வதுபோல் காணப்படுகிறது. பாசறையில் தங்கியிருந்த வீரன், அதை விட்டு, முன்னேறிச் செல்ல ஆயத்தப்படுகிறான்!

2. "நல்ல போராட்டத்தைப் போராடினேன்". "நல்ல" என்றால், மதிப்புமிக்க, நீதியான என்று பொருள்படும். "போராட்டம்" என்றால், உடற்பயிற்சி அரங்கம் அல்லது மைதானத்தில் நடக்கும் ஓட்டப்பந்தயம் என்று பொருள்படும். ஆகவே பவுல் கஷ்டப்பட்டு முயற்சிசெய்திருக்கிறார். கிறிஸ்து அவரை அழைத்த மதிப்பிற்குரிய, புண்ணியமான வேலையைச் செய்து முடிப்பதற்காகக் கஷ்டப்பட்டு முயற்சி செய்கையில், அவரை விரோதித்தவர்களோடு உண்மையுடன் எதிர்த்து நின்றார்.

3. ஓட்டத்தை முடித்தேன் - பவுல், ஒரு விளையாட்டு வீரனைப்போல, வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் எல்லைக் கோட்டைக் கடந்து விட்டார். ஆகவே வெற்றிக் கிரீடத்தைப் பெற்றுக்கொள்ளுவார். (நித்திய ஜீவன், வசனம் 8; யாக்கோபு 1:12; 1 பேதுரு 5:4; வெளிப்படுத்தின விசேஷம் 2:10; 2:5; 1 கொரிந்தியர் 9:25). ஒரு அப்போஸ்தலனாக, சோர்ந்து பின்வாங்கிச்செல்லாத, 30 வருடங்கள் அவர் வாழ்ந்திருக்கிறார். அவர் மனந்திரும்பும்போது, கர்த்தராகிய இயேசுவினால் அவருக்காகப் பிரித்தெடுக்கப்பட்ட வேலையை நிறைவேற்றிவிட்டார். (அப்போஸ்தலர் நடபடிகள் 9:15-16)

4. விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் - இது அநேகமாக மூன்று காரியங்களைக் குறிப்பிடலாம். பவுல் கீழ்க்கண்டவற்றைச் செய்திருக்கிறார்:

(அ) அவரிடம் ஒப்புவிக்கப்பட்ட சுவிசேஷ சத்தியத்தைக் (ஆரோக்கியமான உபதேசம்) காத்துக் கொண்டார். (1 தீமோத்தேயு 1:10; 2 தீமோத்தேயு 1:14)

(ஆ) அவருடைய சொந்த ஆவிக்குரிய நல் வாழ்க்கைக்கு கிறிஸ்துவையே உண்மையோடு சார்ந்திருப்பதில் நிலைத்திருந்தார்.

(இ) அழைக்கப்பட்ட அழைப்புக்கு கடைசிமட்டும் உண்மை பக்தியோடு இருந்தார். (கிறிஸ்துவின் நாமத்தை புறஜாதிகள் மத்தியிலும், இஸ்ரவேல் மக்களின் மத்தியிலும் எடுத்துச் சென்றார். அப்போஸ்தலர் 9:15-16)

ஆ. தீமோத்தேயு (அல்லது எந்த ஒரு விசுவாசியும்) ஊழியத்தோடு சம்பந்தப்பட்ட உபத்திரவங்கள் மற்றும் வாழ்க்கையில் ஏற்படும் தொல்லைகள் மற்றும் சோதனைகளின் வழியாகச் செல்லும்போது உண்மையுடன் நிலைத்திருந்தால், கிறிஸ்துவின் வருகையில் அவனுக்கும் நீதியின் கிரீடம் பரிசாக அளிக்கப்படும்!